முதலியன. இந்தியாவில் மைசூரில் மட்டும் Feliciti (பெலிசிட்டி) தாது அதிக அளவில் கிடைக்கிறது. கடற்கரை பகுதியான உடுப்பி மற்றும் தென் கன்னடாவில் மிக சிறந்த கடற்கரை துறைமுகங்கள் அமைந்துள்ளதால் அங்கு மீன்பிடி தொழில் நடைபெறுகிறது. இப்பகுதியிலிருந்து மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இது ஏராளமான மீனவர்களுக்கு வாழ்வதராமாக விளங்குகிறது. குடகு, சிக்கமகளூர் மற்றும் மைசூரு போன்ற மாவட்டங்கள் மரத் தொழில் வியாபாரத்திற்கு மையமாக விளங்குகிறது.



**கராவளி (கடற்கரைப்பகுதி)**

**பின்வரும் வினாக்களுக்கு விடைதருக**

1. இப்பிரிவிலுள்ள இரண்டு புகழ்வாய்ந்த ஆறுகளின் பெயர்களினை எழுது.
2. இப்பிரிவில் அதிகளவு மழைப்பொழிவு மற்றும் குறைவான மழைப்பொழிவு பெறும் மாவட்டங்கள் எது?
3. மைசூர் பிரிவில் கிடைக்கும் தாதுபொருட்கள் இரண்டின் பெயரினை எழுதுக?
4. கடற்கரை பகுதியிலுள்ள முக்கிய தொழில் என்ன?

### 2.2.3 காடுகள், விலங்குகளின் வாழ்க்கை, தேசிய பூங்காக்கள்

மைசூரு காடுகள் நிறைந்த பகுதியாகும். மைசூரு, குடகு, சிக்கமகளூர், கனரா ஹாசன் போன்ற இடங்கள் அடர்ந்த காடுகள் மிக்க பகுதிகளாகும். பண்டிபூர் நாகரஹோளே, மலை மகாதேஷ்வரா குன்று மற்றும் புஷ்பகிரி போன்றவை புகழ்வாய்ந்த காட்டு பகுதிகளாகும்.



**புடகட்டு சமுதாயம் (மலைவாழ் மக்கள்)**

©KTBS Not to be republished

இங்கு பல்வேறு வகையான சிறிய காட்டு உற்பத்தி பொருட்கள் கிடைக்கின்றன. மலைவாழ் மக்களுக்கு இச்சிறிய காடுகளிலிருந்து வாழ்வாதாரம் மற்றும் உணவு பொருட்கள் கிடைக்கிறது. மலைவாழ் இனமக்களில் மிகப் பெரிய மக்கள் தொகை உள்ளது ஜேனுகுருபரரு இனமாகும். அவர்கள் அதிக அளவிலான எண்ணிக்கையில் மைசூரு மற்றும் சாமராஜ் நகரில் நிலையாக தங்கி வாழ்கின்றனர் தென் கன்னடா மற்றும் உடுப்பியில் கொரகா இனத்தவர் அதிகம் உள்ளனர். இவர்கள் மிகவும் பின் தங்கியவர்கள். மேல்குடி மலைவாழ் இனத்தவர்கள் குடகு மற்றும் தென் கன்னடாவில் நிலையாக தங்கி வாழ்ந்து வருகின்றனர். சோலிகர் இனத்தவர் சாமராஜ் நகரில் உள்ளனர். இவர்களைத் தவிர குறிப்பிட தகுந்த இனமாக யவரரு, ஹக்கிபிக்கிகளு, ஹலசரு, மேதாரரு முதலான மலைவாழ் இன மக்களும் உள்ளனர்.



புலி



யானை



காட்டெருமை

நம்முடைய தேசிய விலங்கு புலியாகும். நம்முடைய மாநிலத்தில் புலிகள் பாதுகாப்பு திட்டம் நடைமுறையிலுள்ளது. இந்தியாவில் ஐந்து இடங்களில் மைசூரில் மட்டும் மூன்று பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அவையாவன, பந்திப்பூர், நாகரஹொளே மற்றும் பத்ரா ஆகும். யானைகள் பாதுகாப்பு திட்டமும் நடை முறையிலுள்ளது. யானைகளை தந்தங்களுக்காகவும், புலிகளை அதன் தோலுக்காகவும் கொன்று விடுகின்றனர். யானைகள் மற்றும் புலிகள் பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதால் இவ்விலங்குகளின் இறப்பு பெருமளவு குறைந்துள்ளன இதனால் கருநாடகாவில் புலிகளின் எண்ணிக்கை மிகுதியாக உள்ளது.

கருநாடகாவில் வன விலங்கு சரணாலயங்களும், பறவைகள் சரணாலயங்களும் அதிக அளவில் உள்ளன. மைசூரில் ரங்கன திட்டு பறவைகள் சரணாலயம், குடவி பறவைகள் சரணாலயம் மற்றும் கொக்கரெ பெள்ளூரு பறவைகள் சரணாலயமுமாகும்.

மேல்கோட்டை வனவிலங்கு சரணாலயம், காவேரி, வனவிலங்கு சரணாலயம் மலை மகாதேஷ்வரா வனவிலங்கு பாதுகாப்பு, புஷ்பகிரி வனவிலங்கு சரணாலயம் இன்னும் சில சரணாலயங்களும் மைசூர் பிரிவுகளில் காணப்படுகிறது.

©KTBS Not to be republished

மைசூரில் நாகரஹொளெ, ராஜிவ்காந்தி தேசிய பூங்கா சாமராஜ்நகரில் பந்திப்பூர் தேசிய பூங்காவும் உள்ளது. செல்ல பிராணிகள் மற்றும் காட்டு யானைகள் வளர்க்கும் முறையாக கெட்டா திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



**ரங்கன திட்டு பறவைகள் சரணாலயம்**

**பின்வரும் வினாக்களுக்கு விடையளி:**

1. மைசூரு பிரிவுள்ள வனப்பகுதிகளில் ஏதேனும் இரண்டின் பெயரினை எழுதுக?
2. இப்பகுதிகளில் நிலையாக வாழும் மலைவாழ் இன மக்களின் பெயர்களை எழுதுக?
3. இரு வனவிலங்கு சரணாலயம் மற்றும் இரு பறவைகள் சரணாலயங்களின் பெயர்களை எழுதுக?

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. நம்முடைய தேசிய விலங்கு ................
2. காட்டுயானைகள் பராமரிக்கும் திட்டம் (பழக்குவிக்கும்) ................ என்றழைக்கப்படுகிறது.

### 2.2.4 வேளாண்மை மற்றும் தொழிற்சாலைகள்

வேளாண்மை நமது மக்களின் வாழ்வதாரம். இதற்கு மைசூரு பிரிவு மாவட்டங்கள் கூட காரணமாகிறது. மைசூரில் பட்டும், ஹாசன், சிக்கமகளூரு, குடகில் காப்பி தோட்டமும், மண்டியாவில் கரும்பும், தென் கன்னடா மற்றும் உடுப்பி மாவட்டத்தில் முந்திரி, மிளகு ஏலக்காய் மற்றும் ரப்பர் போன்றவைகள் காணப்படுகின்றன. நாட்டிலேயே அதிகளவு காபி உற்பத்தி சிக்கமகளூரில் ஆகின்றது. இதனை தவிர வேளாண்மையிலிருந்து பால்பண்ணை, கோழிப் பண்ணை, ஆடுகள் பண்ணை மற்றும் காய்கறி பண்ணை தோட்டங்கள் முக்கியமானவைகள் ஆகும். இப்பகுதியில் முக்கிய பயிர்களான நெல், கேழ்வரகு, சோளம், அவரை, பச்சைப் பயிறு முதலியனவும் காபி, புகையிலை, முந்திரி, வெற்றிலை, பாக்கு, உருளைகிழங்கு, கரும்பு, பருத்தி, ஆரஞ்சு மற்றும் தேங்காய் போன்றன சில வணிகப் பயிர்களாகும்.

©KTBS Not to be republished



பால் பண்ணை

இப்பிரிவு பகுதியிலிருந்து வேளாண்மைக்காக நான்கு நீர்ப்பாசன திட்டங்கள் உள்ளன. அவையாவன ஹாரங்கி, ஹேமாவதி, கிருஷ்ண ராஜ சாஹர் மற்றும் கபினி. அங்கே ஏராளமான வேளாண்மை பண்ணைகள் மற்றும் வேளாண்மை வளர்ச்சிக்கு உதவியாக கல்லூரிகளும் அமைந்துள்ளன.

மைசூரு, மங்களூரு, ஹாசன், சிக்கமகளூர், மண்டியா, மடிகேரி போன்றன தொழில் மையங்களாகும். மருந்து தொழிற்சாலை, காபி சுத்தப்படுத்தும் தொழிற் சாலை, உணவு பாதுகாப்பு கூடங்கள். உரத் தொழிற்சாலைகள், பெட்ரோலிய தொழிற்சாலைகள் (Campaco) காம்ப்கோ சாக்லேட் தொழிற்சாலை, கரும்பு தொழிற் சாலை, சிமெண்ட் தொழிற்சாலை போன்றன இப்பிரிவு பகுதிகளில் காணப்படும் முக்கிய தொழிற்சாலைகளாகும்.

**பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.**

1. இப்பிரிவில் உள்ள இரண்டு தேசிய பூங்காக்களின் பெயர்கள் கூறுக.
2. இப்பிரிவில் ஏதேனும் ஆறு பயிரிடப்படும் பயிர்களின் பெயரினை கூறுக ?
3. இப்பிரிவிலுள்ள ஏதேனும் இரு நீர்ப்பாசன திட்டங்களின் பெயர்களை எழுதுக ?
4. இப்பகுதியிலுள்ள ஏதேனும் மூன்று வகையான தொழில்களின் பெயர்களை எழுதுக.

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. மைசூர் பிரிவில் ................ மாவட்டத்தில் காப்பி அதிக அளவு பயிரிடப்படுகிறது.

©KTBS Not to be republished

**2.2.5 கலை, இலக்கியம், இசை, நாடகவியல், நாடகம் மற்றும் நடனம்**

இப்பிரிவு கலை, இலக்கியம், நாடகம், நாட்டியம் முதலான கலைகளினால் சிறந்து விளங்குகின்றது. மைசூரு நகரத்தை கலைகளின் இருப்பிடம் (தாய்வீடு) என்று அழைக்கின்றனர். கடற்கரையோர பகுதிகளில் யக்ஷ கானா மற்றும் பயலாட்டா நாட்டுப்புற கலைகள் புகழ்பெற்று விளங்குகிறது. யக்ஷகானா தேசிய அளவிலும், உலக அளவிலும் அங்கிகாரம் அளிக்கப்பபட்டுள்ளது .கம்சாலேகுனிதா, சௌடிகெகலை, வீரகாசி, குனிதா, பட குனிதா, நந்திகோலு, இவை அனைத்தும் நாட்டுப் புற கலையிலிருந்து உருவாக்கப்பட்டது. குடகில் உத்தரி திருவிழாவும் பூதாராதனெ கம்பள போன்றன கடற்கரை பகுதியில் கொண்டாடப்படும் சிறந்த சமயச் சடங்குகள் ஆகும்.

கலை, நடனம் மற்றும் இசைக்கு மைசூரு அரசர்கள் மிகச் சிறந்த ஆதரவளித்துள்ளனர். பரத நாட்டியம், கருநாடக சங்கீதம் மற்றும் கலையரங்க நிகழ்ச்சிகளுக்கு அவர்கள் ஊக்கமளித்துள்ளனர். மைசூரில் ரங்காயண (ரெபர்டரி) மண்டபங்களில் வருடங்கள் முழுவதும் நடிப்பு கலைகளை கற்றுக் கொள்ளவதற்கான கலையரங்கத்தையும் அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது மைசூரில் மிகப் பெரிய கலாமந்திர் கலைக்கூடம் அமைந்துள்ளது.



**மைசூரு அரண்மனை**

மைசூரு பிரிவு மாவட்டங்கள் ஏராளமான புகழ் வாய்ந்த இலக்கியவாதிகள் இருப்பிடமாகும். R.K. நாராயணனும், ஹாசன் ராஜாவும் நன்கறிந்த ஆங்கில நாவலாசிரியர்கள் ஆவார். ஞானபீட விருதினை பெற்ற சிவராம் காரன்த், தென் கன்னட பகுதிகளை சார்ந்தவராவர். கன்னட பாவகீதைகளுக்கு கோருரு ஐயங்கார் Dr. S.L. பைரப்பா, M. கோபாலகிருஷ்ண அடிகா, B.M. ஸ்ரீ AN மூர்த்திராவ், தேவனூர் மகாதேவா, அகபர் ஆலி, சாரா ஆபூபகர் அலனஹள்ளி கிருஷ்ணா, பூர்ண சந்திரதேஜஸ்வி, குடகின கௌரம்மா, திருமாலம்பா, திருவேணி, நிரஞ்சன் போன்றவர்கள் கன்னட இலக்கியத்தை சிறப்பித்த இப்பிரிவு அறிஞர்கள்.

RK ஸ்ரீகண்டன் வீணை ஷேசண்ணா, வயலின் சௌடய்யா, வீணை துரைசாமி ஐயங்கார், கத்ரி கோபாலநாதர் போன்றவர்கள் இசைதுறையில் சிறப்புற்றிருந்தனர். கேலிசித்திரம் வரைபவரான R.K லஷ்மன் நாடகத்துறை முகமது பீர் திரைக்கலைஞர்

©KTBS Not to be republished

K.K. ஹெப்பார் நாடகத்துறை மற்றும் திரைப்பட உலகின் B.V காரந்த். நவீன காலத்தின் முந்தைய எழுத்தாளர்களான சஞ்சி ஹொன்னம்மா ரத்னகராவாணி மைசூரின் பிரிவிலிருந்து சிங்காரார்யா போன்றவர்கள் கன்னட பண்பாட்டுவளர்ச்சிக்கு பெரிதும் உதவியாக இருந்தனர். பீல்டு மார்ஷல் ஜெனரல் கார்யப்பா, ஜெனரல் கெ,எஸ். திம்மய்யா இருவரும் நாட்டிற்கு புகழ் தந்த இராணுவப்படை அதிகாரிகள். அறிவியலறிஞர்களான ராஜா ராமண்ணா மற்றும் U.R ராவ் குறிப்பிட தகுந்தவர்களாவர் கருநாடக சமூக நீதி காவலராக தேவராஜ் அரசு விளங்கினார்.



பி.எம். ஸ்ரீ



தேவனூரு மஹாதேவா




வயலின் சௌடய்யா



கே.எஸ். நரசிம்ம சுவாமி



கே.கே. ஹெப்பார்



ஆர். கே. நாராயண்



ஜெனரல் கார்யப்பா



தேவராஜ அரசு

**பின் வரும் வினாக்களுக்கு விடைதருக.**

1. குடகில் நடைபெறும் அறுவடை திருநாளின் பெயர் என்ன?
2. கருநாடக அரசினுடைய ரங்கயான கலையரங்க கம்பெனியின் தலைமை இடம் எந்த நகரத்தில் அமைந்துள்ளது?
3. புகழ் வாய்ந்த கன்னட நாவலாசிரியர்களில் ஏதேனும் இருவர் பெயர்களை எழுதுக.
4. இப்பிரிவில் காணப்படும் ஆங்கில நாவலாசிரியர்களில் ஏதேனும் இருவர்களின் பெயர்.

© KTBS Not to be republished



ஹுத்தரி குடகு திருவிழா

### 2.2.6 கல்வி மற்றும் ஆரோக்கியம்

மைசூரு ஒரு கல்வி மையமாகும். இங்கே படிப்பறிவு அதிகமுள்ளது அந்தந்த காலகட்டங்களில் ஆட்சி செய்த அரசர்கள் கல்விக்கு அதிகமளவு ஊக்கமளித்துள்ளனர். 1915-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட மைசூரு பல்கலைகழகம் தற்போது தான் அதன் 100 வது ஆண்டு விழாவினை கொண்டாடியது. இம்மாவட்டத்தில் ஏராளமான பொறியியல் கல்லூரிகள் மற்றும் மருத்துவ கல்லூரிகள் காணப்படுகின்றன. மங்களூரு மாவட்டத்தில் முக்கியமாக மங்களூரு பல்கலைகழகம் அமைந்துள்ளது. இப்பிரிவில் ஏராளமான தனியார் கல்லூரிகளும் உள்ளன. மைசூரில் CFTRI மத்திய உணவு தானிய ஆராயச்சி மையம் உள்ளது. கல்வித்துறைக்கு சுத்தூரு மடத்தின் பங்களிப்பு ஏராளம். கல்லூரிகள், மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளை சுவாமிஜி அவர்களே நடத்துகிறார்கள். இப்பிரிவினில் கல்வி மற்றும் ஆரோக்கிய துறைக்கு தர்மஸ்தலா மற்றும் மணிபால் நிறுவனங்களின் பங்களிப்பு மிகமுக்கிய மானவையாகும்.



சுத்தூரு மடம்

©KTBS Not to be republished

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டமருத்துவமனைகள் உள்ளன. கிராமப்புற பகுதிகளில் சிறு சிறு சுகாதார அமைப்புகள் அமைக்கப்பட்டு மருத்துவ உதவிகள் தடுப்பூசி மற்றும் மருந்துகள் கொடுக்கப்படுகிறது. கர்ப்பிணி பெண்களுக்கு மற்றும் பிரசவித்த மகளிரின் ஆரோக்கியத்திற்கு சுகாதார உதவியாளர்கள் உதவியாக (ஆஷா) பணியாளர்களும் உள்ளனர். இதனால் குழந்தைகள் இறப்புவிகிதம் குறைந்து காணப்படுகிறது. மருத்துவ உதவிகள் அனைத்தும் அளிக்கப்பட்டுள்ளதால் மக்களின் இறப்பு விகிதம் மிக குறைவு இதனால் மக்களின் ஆயுட்காலம் அதிகமாக காணப்படுகிறது. இவைகள் முக்கிய ஆரோக்கியமான பயன்பாடுகளாகும்.



**நோய் எதிர்ப்புக்கான தடுப்பூசி போடுதல்**

**பின்வரும் வினாக்களுக்கு விடைதருக:**

1. எந்த பல்கலைகழகம் மைசூருவில் 100-வது விழாவினை கொண்டாடியது?
2. கிராமப்புற பகுதிகளில் மக்களுக்கு (சுகாதார சேவை) ஆரோக்கிய சேவை அளிக்கும் மையங்களின் பெயர்கள் யாவை?
3. ஏதேனும் இரு சுகாதாரக் குறிப்புகளின் பெயர்களை எழுதுக.

**2.2.7 கலாச்சார பழக்க வழக்கம்**

கலாச்சார பழக்க வழக்கத்தில் மேன்மையடைந்த பிரிவு மைசூரு பிரிவாகும். மைசூருவில் இயற்கை வளங்கள் உள்ளன. அவையாவன. ஆறுகள், அடர்ந்த காடுகள், வனவிலங்குகள், நீர் வீழ்ச்சிகள். கரும்புக்கு மண்டியா புகழ்பெற்று விளங்குகிறது. ஹாசன் மற்றும் சிக்கமகளூர் பகுதி காப்பிக்கு பெயர் பெற்ற இடங்களாகும். யக்ஷகானா கடற்கரை பகுதியும் ஹம்சாலே குனிதா சாம்ராஜ் நகரிலும் நாட்டுபுற கலைக்ள புகழ்பெற்று விளங்குகிறது. சோமநாதபுரா, பேளூர், சென்ன கேசவா கோவிலின் கோபுரங்கள், ஷ்ரவண பெளகொளத்தின் கொம்மடேஷ்வரன ஒரேகல்லினால் ஆன சிலை ஹளேபீடு, மூடுபித்ரே போன்றவை சில புகழ்வாய்ந்த கோவில்களாகும். எல்லா

© KTBS Not to be republished

மாவட்டங்களை விட மைசூரில் அதிகளவு சுற்றுலாதலங்கள் காணப்படுகின்றன. குடகு மாவட்டத்தில் தலகாவிரி என்னுமிடத்திலிருந்து காவேரி ஆறு உற்பத்தியாகிறது. இது கருநாடக மாநிலத்திற்கு ஜீவாதாரமாக விளங்குகிறது. நூறு கிலோமீட்டருக்கும் அதிகமான நீண்ட கடற்கரை இப்பிரிவில் உள்ளது. மீன்பிடி துறைமுகங்கள் நீர்விளையாட்டு மற்றும் கல்விமையங்கள் இப்பிரிவு பகுதியில் காணப்படுகின்றன.



கொம்மடேஷ்வரா சிலை சிரவணபெள கொளா

*2.2.8 சுதந்திர போராட்ட வீரர்கள்*

இம் மாவட்டத்தில் சுதந்திர போராட்டம் அதிகளவில் நடைபெற்றது. காந்திஜிக்கு விருப்பமான கதர் மையங்கள் குடிசை தொழிற்சாலைகள் அதிகளவு காணப்படுகின்றன. மங்களூரிலிருந்து தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தில் குத்மல் ரங்கராவ் அவர்கள் தீண்டாமை ஒழிப்பிற்கு தமது வாழ்வையே அர்ப்பணித்தார். தடகூரு இராமசந்திரராவ் அவர்கள் காந்திஜியின் அபிமானி. இவரும் தீண்டாமையை ஒழிக்க போராட்டம் நடத்தியவர். HC தாசப்பா, யஷோதரம்மா தாசப்பா கர்நாட சதாசிவராவ், HK வீரண்ணா கௌடா, KT பாஷியம் கமலாதேவி, சட்டோபாத்யாயா, KV சங்கர் கௌடா, K. இராமகிருஷ்ண காரந்த, CM பூனஞ்சா போன்றவர்கள் சுதந்திர போராட்டங்களில் ஈடுபட்டவர்களுள் இவர்கள் சிறப்பான பங்கேற்றுள்ளனர். இவ்வாறு மைசூரு பிரிவு மாவட்டங்கள் தேசிய மற்றும் மாநில அளவில் புகழ்பெற்று விளங்குவன. ஏராளமானோர் கருநாடக ஒருங்கிணைப்புக்காக போராடினர். தேசிய அளவிலும் உலகளவிலும் மைசூரின் தசரா விழா புகழ்வாய்ந்த ஒன்றாகும்.

**பின்வரும் வினாக்களுக்கு விடைதருக:**

1. மைசூரு பிரிவுகளிலிருந்து ஏதேனும் இரு ஆங்கில நாவலாசிரிர்களின் பெயர்களை எழுதுக?
2. தீண்டாமைக்கு எதிராக போராடிய இரு சுதந்திர போராட்ட வீரர்களின் பெயர்களை எழுதுக?

©KTBS Not to be republished

3. சிரவணபெளகொளா எதற்கு புகழ்வாய்ந்ததாக உள்ளது?
4. இம்மாவட்டத்தை சேர்ந்த ஏதேனும் நான்கு சதந்திர போராட்ட வீரர்களின் பெயர்களை எழுதுக?

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**


1. காவேரி ஆறு குடகு மாவட்டத்தில் ............... என்னும் இடத்திலிருந்து உற்பத்தியாகிறது.
2. குத்மல் ரங்காராவ் .............. க்கு எதிராக போராடினார்.
3. மைசூரில் நடைபெறும் உலகப்புகழ்பெற்ற விழாவின் பெயர் ......................
4. மைசூரு பிரிவின் .............. மற்றும் .............. மாவட்டங்களில் துறைமுகங்கள் உள்ளன.

**2.2.9 மாவட்டங்களின் சிறப்புகள்:**

இப்பிரிவில் மைசூரு பிரிவு மாவட்டங்களின் விவரமான அறிமுகம் செய்து கொள்வோம். இம் மாவட்டத்தின் சிறப்பு, சுற்றுலா தலங்கள், விவசாயம், தொழில்கள் புகழ்பெற்ற நபர்கள் முதலான தகவல்கள் புகழ்பெற்ற நபர்கள் முதலான தகவல்களை இங்கு விவாதிக்கலாகிறது.

**மைசூரு மாவட்டம்**

மைசூரு சமஸ்தானத்தின் தலைநகரமாக இருந்த மைசூரு அழகான நகர். இன்று அது தலைநகர் எனும் இடத்தை இழந்துள்ளது. ஆனால் அது நமது மாநிலத்தின் கலாச்சார மையமாக உள்ளது.



**மைசூரின் புனித பிலோமினா தேவ திருச்சபை**

மைசூர் பல்கலைகழகம் பழைமை வாய்ந்த ஒன்றாகும். பழங்காலங்களிலிருந்தே உலகளவில் பெருமை வாய்ந்த ஒரு திருவிழாவாக தசரா பண்டிகை விளங்குகிறது. இங்கு அரண்மனை வீடுகளும், கோவில்களும் புகழ்வாய்ந்த சாமுண்டி மலைக்குன்றில் நந்தி சிலைகளும் உள்ளன. சோமாநாதபுரம், நஞ்சன் கூடு, தலக்காடு, பெட்டதூரின் கொம்மடகிரி, கைத்தறி மற்றும் குடிசைத் தொழில்களுக்கு பெயர் பெற்ற பதனவாளு முதலானவை இந்தியர் மற்றும் வெளிநாட்டினரை கவர்ந்திழுக்கும் ஒரு இடமாகும். குழந்தைகளையும், வயது வந்தவர்களையும் கவரும் ஒரு புகழ்மிக்க இடமாக மைசூரு மிருகக் காட்சி சாலை விளங்குகிறது. ஆசியாவிலேயே இங்கு தான் ரயில் அருங்காட்சியகமும் மிகப் பெரிய நாட்டுப்புற கலையரங்கமும்

©KTBS Not to be republished

காணப்படுகிறது. கிருஷ்ணராஜ சாகருக்கு பின்புறம் புகழ்வாய்ந்த பிருந்தாவன் தோட்டம் உள்ளது. ப்ரியா பட்டனா தாலுக்காவில் பைலுகுப்பே என்னுமிடத்தில் திபெத்தியர்களுக்கான மடாலயங்களும் காணப்படுகிறது. உலக புகழ் வாய்ந்த புத்த விகாரம் பைலுகுப்பேவிலுள்ளது. நமது மாநிலத்தை (ராஜ்ஜியம்) 1973 வரை மைசூரு மாநிலம் (ராஜ்ஜியம்) என்ற அழைக்கப்பட்டது.


ஜகன் மோகன் அரண்மனை


சாமுண்டி குன்று


புத்தவிஹார், பைலுகுப்பே

**சாமராஜ நகர் மாவட்டம்**

அரிக்குத்தாரா என்று சாமராஜ நகர் பழங்காலத்தில் அழைக்கப்பட்டது. மூன்றாம் கிருஷ்ண ராஜ உடையார் அவருடைய தந்தை சாமராஜ உடையார் நினைவாகவும் சாமராஜ நகர் எனப் பெயரிட்டார். இங்கு சாமராஜேஷ்வரா எனும் பெயரில் புகழ்பெற்ற கோவிலை கட்டினார். இப்பகுதியில் அதிகளவு முசுக் கொட்டை இலை பண்ணையும் பட்டு வளர்ப்பு தொழிலும் உள்ளது. நாளடைவில் அதுகுறைந்து கொண்டே வருகிறது.

இம்மாவட்டத்தின் குண்டல் பேட்டை தாலுக்காவில் பந்திப்பூர் தேசிய பூங்கா உள்ளது. பார்வையாளர்கள் பார்ப்பதற்க்கான வன விலங்குகளான, புலி, சிறுத்தை மற்றும் வேறு சில விலங்குகளும் உள்ளன. அதற்கும் மேலாக பிளிகிரிரங்கன குன்றில் வனவிலங்கு சரணாலயம் கூட இங்குள்ளது. இது யானைகளின் முக்கிய வசிப்பிடமாகும். பிளிகிரிரங்கன குன்றின் மீது பிளிகிரிரங்கன கோவில் உள்ளது. சாமுண்டி குன்று புத்தவிஹார், பைலுகுப்பே மலைமகாதேஷ்வரா மற்றும் ஹிமவத் கோபாலசுவாமி போன்றன இம்மாவட்டத்திலுள்ள புகழ்வாய்ந்த கோவிலாகும்.


**மலை மஹதேஷ்வரன், கோயில்**


**பண்டிபுரா**

©KTBS
Not to be republished

இம்மாவட்டத்தில் ஏராளமான சமயமையங்களுமுள்ளன. ஹரதன ஹள்ளியில் லிங்காயத ஆன்மீக சாதனையாளரின் புனித இடமும் உள்ளது; இம்மாவட்டத்தின் முக்கிய தாலுக்காவான கொள்ளேகால் பட்டுக்கும் புகழ்பெற்ற இடமாகும். இத்தாலுக்காவின் சிக்கலூரில் சித்தப்பாஜி அவரனி (சமாதி) கத்துகே உள்ளது. சத்தேகால என்னுமிடத்தில் புகழ்பெற்ற பண்டள்ளி தர்கா உள்ளது. புகழ்வாய்ந்த ஒகேனேக்கல் நீர்வீழ்ச்சியும் இங்குள்ளது. கன்னடத்தின் புகழ்பெற்ற கவி ஷடக்ஷ்ரதேவனின் கத்துகே (சமாதி) யளந்தூரினில் உள்ளது.

**ஹாசன் மாவட்டம்**





சன்னகேஷவ கோயில், பேலூர்



ஹொய்சளேஷ்வர கோயில், ஹளேபீடு

ஹாசனம்பா கோவில் பெயரில் ஹாசன் அழைக்கப்படுகிறது. பொதுமக்களின் பார்வைக்காக இக்கோவில் வருடத்திற்க்கு ஒரு முறை திறக்கப்படுகிறது. இம்மாவட்டத்தின் சிற்பங்கள் புகழ்வாய்ந்த ஹொய்சாளர்கள் கட்டிடக் கலையை கொண்டுள்ளதாகும். கொரூரு, மொஸளே முதலானவை புகழ்பெற்ற கிராமங்கள் பேலூரிலுள்ள ஆற்றங்கரையில் சென்ன கேசவ கோவிலுள்ளது. இதில் அழகான சிற்ப கலைகளுமுள்ளன. பேளூர் வேலாபுரி என்றழைக்கப்படுகிறது. ஹளபீடுவில் கேதாரேஷ்வரா மற்றும் ஹொய்சளேஷ்வரா கோவில்களுமுள்ளன. இக்கோவில்களுக்கு ஒரு ஆயிரம் வருடங்களின் வரலாறு உள்ளது. இதனால் இப்பகுதி துவார சமுத்திரா என்றழைக்கப்படுகிறது. இம்மாவட்டத்தில் மற்றொரு அற்புதமான இடமாக சிரவணபெளகொளா அமைந்துள்ளது. ஆயிரம் ஆண்டுகள் பழைமையான ஒரே கல்லாலான பாகுபலியும் இங்குள்ளது. இதன் உயரம் 58 அடியாகும் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மகாமஸ்தாபிஷேகம் இப்பகுதியில் நடைபெறுகிறது. தேசிய மற்றும் உலகளாவிய புனித பயணிகளை கவர்ந்து இழுக்கிறது. ஹாசன் மற்றும் மங்களூருக்கு இடையேயான 58 அடி தோண்டப்பட்ட சுரங்க இரயில் பாதை வழியாக பயணம் மேற்கொள்வது மிக சாகசமான ஒன்றாகும். கருநாடகத்தில் இம்மாவட்டத்திலிருந்து ஸ்ரீ H.D. தேவே கெளடா முதல் முறையாக பிரதம அமைச்சராக பதவி வகித்தவர்.



**H.D. தேவே கெளடா**

©KTBS Not to be republished


**சிக்கமகளூர் மாவட்டம்**

ஆதிசங்கராச்சாரியரினால் நிறுவப்பட்ட சாரதா கோவில் சிருங்கேரியிலுள்ள துங்கா நதிக்கரையில் உள்ளது. சிக்கமகளூர் கடல் மட்டத்திலிருந்து 1034 மீட்டர் உயரத்திலுள்ளது. எப்பொழுதும் இதமான கால நிலை நிலவுகிறது. இம்மாவட்டம் மலைநாடின் மையமாக உள்ளது. இம்மாவட்டம் அடர்ந்த காடுகளால் நிறைந்துள்ளது. மாவட்டத்தில பத்ரா வனமிருக சரணாலயம் உள்ளது இதனை முத்தோடி வனவிலங்குகள் சரணாயலம் என்றும் அழைக்கின்றனர். உலவி பறவைகள் சரணாலயமும் இங்குள்ளது. 19-ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட ஆன்ட்ரூ கிறித்துவ தேவாலயம் உள்ளது. புகழ்பெற்ற ஜாமியா மசூதியும் இங்குள்ளது.

கெம்மன் குண்டியில் வளமான பசுமை மாறாக்காடுகளுள்ளது. கடல் மட்டத்திலிருந்து 1400 மீட்டர் உயரத்தில் ஏராளமான நீர் வீழ்ச்சிகளும் உள்ளது. தங்கி ஒய்வெடுக்கும் இடமாக திகழும் அரண்மனையை நால் மடிகிருஷ்ண ராஜ உடையார் கட்டினார் அப்பிநீர் வீழ்ச்சி, முள்ளையன கிரி மற்றும் கள்ளத்தகிரி போன்றன கண்ணைக் கவரும் இடங்களாகும் இது ஒரு புகழ்வாய்ந்த சுற்றுலாஸ்தலமாகும். இங்கே 1500 வகையான ரோஜா பூக்கள் இத்தோட்டத்தில் காணப்படுகிறது. இப்பகுதி வீரதீர சாகசங்கள் நடத்தும் ஒரு விளையாட்டு மையமாக திகழ்கிறது. மேற்கு தொடர்ச்சி மலையுள்ள பாபுதன் கிரி சந்திரதுரோன மலை என்றழைக்கப்படுகிறது. இம்மலையில் அபிஞானி பாபாபுதன் தர்காவும் உள்ளது. இவர் இந்தியாவிற்கு காபியினை அறிமுகப்படுத்தியவர் என்றும் நம்பப்படுகிறது.



**சிருங்கேரி சாரதாம்பா கோயில்**



**பாபாபுதன் கிரி தர்கா**



**செயின்ட் ஆன்ட்ரோ சர்ச்**

இம்மாவட்டத்தில் புகழ்வாய்ந்த லஷ்மிசா பிறந்த இடமான தேவானுரு இங்குள்ளது அவர் எழுதிய புகழ் வாய்ந்த கன்னட மொழியின் புகழ்பெற்ற இலக்கியமாகும்.


இம்மாவட்டத்தின் மலைகளிலிருந்து ஏராளமான ஆறுகள் உற்பத்தியாகின்றன. அவையாவன, துங்கபத்திரா, ஹேமாவதி, நேத்ராவதி மற்றும் வேதவதி ஆறுகளாகும்.

©KTBS Not to be republished

**மண்டியா மாவட்டம்**

*1938-ல் மைசூரிலிருந்து மண்டியா தனியாக பிரிந்து ஒரு மாவட்டமாக உருவானது. மாண்டயவிய ரிஷி இங்கேயிருந்து தவம் செய்ததால் இப்பகுதியின் பெயர் மண்டியா என்றாயிற்று. கரும்பும் நெல்லும் இப்பகுதியின் முக்கிய பயிராகும். 1933ல் இந்தியாவின் மிகப்பெரிய சர்க்கரை தொழிற் சாலை ஏற்படுத்தப்பட்டது. இங்கே ஏராளமான அரிசி ஆலைகளும் உள்ளன. 1951 குண்டலூவில் வேளாண்மைக்காக வேளாண் ஆராயச்சி மையமும், ஷிவள்ளி என்னுமிடத்தில் விதை உற்பத்திமையமும் உள்ளன.*

*இம்மாவட்டத்தின் ஸ்ரீரங்கப்பட்டணம் வரலாறு மற்றும் மதங்களின் இடமாகும். 1799 ஆம் ஆண்டு வரை ஸ்ரீரங்கப்பட்டணம் உடையார் அரசர்களின் தலைநகராக இருந்து வந்தது அதன்பிறகு ஆங்கிலேயர்கள் அந்த அதிகாரத்தை எடுத்துக் கொண்டனர். திப்பு சுல்தான் ஏராளமான மசூதிகள், கோட்டைகள் மற்றும் படை கருவிகள் வைத்திருக்கும் இடங்களையும் கட்டினார். தரியாதௌலத் திப்பு சுல்தானின் ஒய்வெடுக்கும் அரண்மனையாகவும் கண்ணை கவரும் இடமாகவும் காணப்படுகிறது.*



**கிருஷ்ணராஜ சாகர் அணைக்கட்டு**



**ஸ்ரீரங்கபட்டண ஆலயம்**



**தரியா தௌலத் பாக்**

*இந்த நகரம் காவேரி நதிக் கரையிலுள்ளது நகரக் கடவுளான ஸ்ரீ ரங்கநாத சுவாமிக்கு ஒரு கோவிலும் உள்ளது. காவேரி ஆறு மூன்று தீவு பகுதிகளை உருவாக்கி, ஒவ்வொரு தீவிலும் ரங்கநாத சுவாமி கோவில் அமைக்கப்பட்டுள்ளது. அதில் ஒன்று ஸ்ரீ ரங்கப்பட்டணம்.*

*இரண்டாவது சிவன சமுத்திரம் ஸ்ரீரங்கநாத சுவாமி ஆலயம். மூன்றாவது தமிழ் நாட்டிலுள்ள ஸ்ரீ ரங்கத்தில் உள்ள ஸ்ரீ ரங்கநாத சுவாமி ஆலயம், ஸ்ரீ ரங்கத்தி பஷ்சிம வாஹினி இந்துக்களின் புனிதஸ்தலமாகும். ஆதிநாத தீர்த்தங்கரருடைய பச தியும் இங்குள்ளது. ஜூம்மா மசூதியும் உள்ளது. கஞ்சம் என்னுமிடத்தில பிரென்சு பயணி அப்பெ துபாயி கட்டிய கிறிஸ்துவ தேவாலயம் உள்ளது. இந்நகரம் மாட்டு வண்டிகளை உருவாக்கும் மையமாக உள்ளது.*

*இம்மாவட்டத்திலுள்ள ஒரு கிராமமான பொப்பே கௌடனபுரம் மண்டேஸ் சுவாமி என்ற புனித இடம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ரங்கனதிட்டு பறவைகள் சரணாலயம், பாண்டவபுரம், மேல் கோட்டை, சிவன சமுத்திரம் அதனுடன் பரசுக்கி - ககன் சுக்கி நீர்வீழ்ச்சிகளும் சுஞ்சன கிரி போன்றன இம்மாவட்டத்தின மகிழ்ச்சி க்குரிய இடமாகும். ஆதிசுஞ்சன கிரி மடம் மூலம் கல்லூரிகளும், பள்ளிகளும்*

©KTBS Not to be republished

நடத்தப்பட்டன. 1854-ல் மேல் கோட்டையில் சமஸ்கிருத பள்ளியுமுள்ளது. பரகால மடம், அகோபலமடம் மற்றும் யத்திராஜ மடமும் உள்ளது.

மண்டியா மாவட்டத்தின் ஜீவாதாரமாக கிருஷ்ண ராஜசாகர் அணை விளங்குகிறது. மண்டியா மைசூர் மாவட்டங்களின் நீர்பாசனத்திற்காக காவேரியின் குறுக்கே இவ் அணை கட்டப்பட்டுள்ளது.

இவ் அணை கட்டுவதற்கு சர்.எம். விசுவேசுவரய்யா வழிகாட்டியாக உள்ளார். இந்த அணை கட்டுவதற்க்கு பெரும் பாடுபட்ட IV கிருஷ்ணராஜ உடையார் பெயர் சூட்டப்பட்டது. 1932ல் கட்டப்பட்டது இந்த அணை நீர்ப்பாசனத்திற்கு மட்டுமல்ல மைசூர் மற்றும் பெங்களுரு நகரங்களுக்கு கூட குடிநீர் வசதியளிக்கப்பட்டு வருகிறது. காவேரி ஆற்றின் குறுக்கே தமிழ் நாட்டில் சேலத்தில் மேட்டூர் அணை கட்டப்பட்டுள்ளது.

**குடகு மாவட்டம்**

குடகு கருநாடகாவின் காஷ்மீர் எனப்படுகிறது. கெலதி அரசர்களின் வீழ்ச்சிக்கு பிறகு 1600 முதல் 1834 வரை குடகினை ஹாவேரி அரசர்கள் ஆட்சி புரிந்தனர் 1834-ல் இருந்து பிரிட்டிஷார் குடகு பதியினை ஆண்டு வந்தனர். 1956-ல் அது கருநாடகாவின் ஒரு பகுதியாக இணைந்தது. இது ஒரு மலைப்பிரதேச இடமாகும். அறுவடை திருவிழாவான ஹுத்தரி திருவிழா மிக சிறப்பாகவும் ஆடம்பரமாகவும் கொண்டாடப்படுகிறது. அவர்கள் பாரம்பரியமான ஆடைகளை அணிந்து கொள்வர்.

குடகு ஒரு முக்கியமான சுற்றுலா ஸ்தலமாகும். காவிரி ஆறு உற்பத்தியாகும் இடம் அப்பெ நீர்வீழ்ச்சி. இர்ப்பு நீர் வீழ்ச்சி துபாரெ யானை தங்குமிடம் நாகரஹொளெ போன்றன முக்கிய சுற்றுலா இடங்களாகும். சிக்கமகளுரை தவிர குடகு அதிக அளவில் காப்பி உற்பத்தி செய்யப்படுகிறது. குடகு கர்நாடகாவின் மிகச் சிறிய மாவட்டமாகும். இங்கு மூன்று தாலுக்காக்கள் உள்ளன. கொடவா, குடியா,மலக் குடியா மலைவாழ் இனத்தவர். முஸ்லீம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் பெருமளவில் காணப்படுகின்றனர். எல்லோரையும் கவர்ந்திழுக்கும் திருச்சபை விராஜ் பேடெயில் உள்ளது.


சர்ச், வீரராஜபேட்டை

**தென் கன்னட மாவட்டம்:**

இது ஒரு கடற்கரை மாவட்டமாகும். ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வியாபாரம் நடைபெற்று வருகிறது. மீன்பிடித் தொழில், பீடி சுற்றுதல் முந்திரி பருப்பு ஆலை மற்றும் வேளாண்மை போன்றன முக்கியமான தொழில்களாகும். இக்கடற்கரை பகுதி மெட்ராஸின் ஒரு பகுதியாக முன்பிருந்தது கனரா பகுதிகளை 1960ல் பிரிட்டிஷ்காரர்கள் தென் கன்னடா மற்றும் வட கன்னடா மாவட்டங்களிலிருந்து பிரித்தனர். தென் கன்னடா மெட்ராஸ் மாகாணத்தின் ஒரு பகுதியாகும். வட கன்னடா நாளடைவில் அதன் நிர்வாகப் பொறுப்பு பாம்பே மாகாணத்திற்கு மாறியது 1956ல் அப்பகுதி மீண்டும் கர்நாடகாவுடன் இணைக்கப்பட்டது.

©KTBS Not to be republished

தென் கன்னடா இரு நிலவியல் பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இத்தாலுகாவில் மங்களூர் மற்றும் பண்டுவாலா போன்றன கடற்கரை பகுதிகளாகும். சுலையா தாலுக்காவில் சில மலைப்பகுதிகளை உள்ளடக்கிய இடமாக புத்தூர், பெல்தங்கடி போன்றன. இது ஒரு மிகப்பெரிய வர்த்தக மையமாகும். பனம்பூர் துறைமுகம் ஏற்றுமதி தொழிலுக்கு பெயர்போனதாகும். நவ மங்களூர் துறை முகமும் இங்கு கட்டப்பட்டுள்ளது. மங்களூருடைய பஜ்பெ ஒரு பன்னாட்டு விமான நிலையமாகும்.



**ஆயிரம் தூண்களின் மண்டபம், மூடபிதரெ**



**மஞ்சுநாதர் ஆலயம், தர்மஸ்தலம்**



**உள்ளால ஜூம்மா மசூதி**



**புனித அலோசியஸ் தேவாலயம்**

நேத்ராவதி, பயஸ்வினி மற்றும் குமாரதாரா ஆறுகள் இம்மாவட்டத்திலுள்ளது.

வேனூரு கொம்மடேஷ்வரா ஏராளமான சமய இடங்கள் இம்மாவட்டத்திலுள்ளது. வேனூரு கொம்மடேஷ்வரா ஒரே கல்லாலான சிலையாகும். கத்ரியில் ஶ்ரீ மஞ்சு நாதா ஆலயமும் உள்ளது. மூடபிதிரெ ஒரு புகழ்வாய்ந்த சமண சமய மையமாகும். இங்கே ஏராளமான மண்டபங்கள் உள்ளன. தர்மஸ்தலா புகழ் வாய்ந்த புனித யாத்ரிகர்களின் மையமாகும். கோகர்னாதேஸ்வரா ஆலயம் குத்ரோளியில் உள்ளது. கடீலினாவில் உள்ள துர்கா பரமேஸ்வரி கோவில் மிகவும் புகழ் பெற்றது. புனித அலோசியஸ் திருச்சபை மற்றும் மிலாகிரிஸ் திருச்சபையையும் பேர்பெற்ற ஒன்றாகும். உள்ளாலவில் முஸ்லீம்களின் புகழ்வாய்ந்த ஜூம்மா மசூதியும் உள்ளது.

©KTBS Not to be republished

பிலிகுள நிசர்கதாமா 350-ற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்விடத்தில் டா. சிவராம் காரந்தினுடைய உயிரிப் பூங்காவும் இவ்விடத்தில் உள்ளது. நாட்டுப்புறவியல், அருங்காட்சியகம், அறிவியில் மையம் மற்றும் கட்டிடக்கலை மையம் போன்றன குழந்தைகள் மற்றும் முதியவர்களை கவர்ந்திழுக்கும் இடமாக அமைந்துள்ளது.

மரபு வழியான நாகாராதனெ. கம்பளா, பூதக்கோலா, போன்ற வழிபாடு நடைபெறுகின்றன. இன்று தென் கன்னட மாவட்டம் மாநிலத்தின் முக்கிய கல்வி மையமாக வளர்ந்து வருகிறது. மங்களூரு. சூரத்கல் மற்றும் சுலியா முதலானவை முக்கிய கல்வி மையங்களாகும். இங்கு ஏராளமான ஆராய்ச்சி மையங்களும் அழகான கடற்கரை பகுதிகளும் எண்ணிக்கையற்ற சுற்றுலா பயணிகளை கவர்ந்திழுக்கின்றன.

**உடுப்பி மாவட்டம்**



உடுப்பி ஸ்ரீ கிருஷ்ணர் ஆலயம்



கார்களவின் கொம்மட



புனித லாரன்ஸ் தேவாலயம்

தென் கன்னடாவிலிருந்து 1997 ஆம் ஆண்டு உடுப்பி தனியாக உருவாக்கப் பட்டது. இது அரபிக் கடலின் மேற்கு பகுதியில் உள்ளது. அதன் கிழக்குப் பகுதி மேற்கு தொடர்ச்சி மலைத் தொடர்களால் ஆனது. உடுப்பியில் ஏராளமான ஆறுகளும் வளர்ந்த தென்னை மரங்களும், வளர்ந்த பாக்கு மரங்களும், நெல் வயல் வெளிகளும் உள்ளன. இங்கே ஸ்ரீ கிருஷ்ணர் கோவில் உள்ளது. துவைத் ஞானி, மத்துவாச்சாரியார் ஸ்ரீ கிருஷ்ணர் சிலையை உருவாக்கினார் என்று நம்பப்படுகிறது. இச்சிலை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நகர்ந்தது என்றும் கனகதாச ஞானியால் நம்பப் படுகிறது. இவ்விடத்தில் ரிஷி நிறுவிய இச்சிலை கனகனகிண்டி என்றழைக்கப்படுகிறது. மூகாம்பிகை கோவில் கோடசாத்ரி மலைக் குன்றின் மேலுள்ளது. கார்களவிலுள்ள 42 அடி உயரமுள்ள கொம்மடேஷ்வரர் சிலை உலகப் புகழ்வாய்ந்ததாகும்.

தேசியகவி கோவிந்த பையினுடைய ஆராய்ச்சி மையத்தின் இருப்பிடம் உடுப்பியில் உள்ளது. வேறு சில பகுதிகளான மணிப்பால் மல்பே, குந்தாபுரா, மந்தார்தி, கோடா, காபு, பராக்குரு, மரவந்தே போன்றன புகழ்வாய்ந்த இடங்களாகும். மணிபால் கல்விமையமாக வளர்ந்து வருகிறது. பஸரூரு என்பது புகழ்பெற்ற

© KTBS Not to be republished

வியாபார பட்டணமாகும். டச்சு மற்றும் போர்த்துக் கீசியர்களும் இங்கு வியாபாரம் செய்து வந்தனர். நெல் தென்னை, வெற்றிலை பாக்கு, முந்திரி முதலியன முக்கிய பயிர்களாகும். மல்பே எல்லா காலங்களிலும் மீன் பிடித்தொழில் நடைபெறும் துறைமுகமாகும் புனித மேரி தீவு புகழ்வாய்ந்த தீவாகும்.



**மைசூரு பல்கலைக்கழகம்**



**தலகாவேரி**




**மங்களூரு துறைமுகம்**

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக:**

1. மைசூரு மாநிலத்தில் விளையும் முக்கிய வணிகப்பயிர்களின் பட்டியல் தருக.
2. தென் கன்னடா மற்றும் உடுப்பி மாவட்டத்திலுள்ள இரு துறை முகங்களின் பெயர்களை எழுதுக?
3. இப்பிரிவு பகுதியிலுள்ள கொம்மட்டேஸ்வரர் சிலை எந்த எந்த இடங்களில் காணப்படுகிறன்றன?
4. காவேரி நதி எந்த மாவட்டத்தில் எந்த இடத்தில் உற்பத்தியாகின்றது?

**செயல்பாடு:**

- இம்மாகாணங்கள் / பிரிவுகளிலுள்ள மிகப்பழைமையான கோவில்கள் அதனுடைன் அரசர்கள்/ பேரரசர்கள் கோவில்கள் கட்டியவர்களினுடைய படங்களை தயார் செய்க.
- பல்வேறு மாவட்டத்திலுள்ள கொம்மட்டேஸ்வரர் சிலை உயரம் பற்றி ஆராய்ச்சி செய்க? அச்சிலைகள் பற்றிய படங்களை பட்டியலிடுக.

©KTBS Not to be republished

| பாடம் 3 | ஆரம்பநிலை சமூகம் (Pre-historic Society) |
|---|---|

**பாட அறிமுகம்**

இப்பாடத்தில் வரலாற்று காலம் மற்றும் தொல் பழங்காலத்து வரலாற்றுக்கு முந்தைய இதிகாச காலங்களின் இடையேயான வேறுபாட்டினை தெரிவிக்கலாகிறது. பூமியின் தோற்றம் மற்றும் உயிரிகளின் வளர்ச்சிக் குறித்து விவரிக்கப்பட்டுள்ளது. பழைய கற்காலம் (மத்திய) இடை கற்காலம் மற்றும் புதிய கற்காலம் மேலும் உலோகங்களின் யுகங்களில் மனிதனின் வாழ்வில் உண்டான மாற்றங்கள் குறிப்பிட்டுக் காணலாகிறது.

**திறன்கள்:**

1. வரலாற்றின் பிரிவுகளில் எழுத்துக்களின் இடத்தினை அறிந்து கொள்ளுதல்.
2. பூமியின் மீது உயிரினங்கள் தோன்றிய படிகளை அறிந்து கொள்ளுதல்.
3. கற்காலத்தின் படிநிலைகளை மற்றும் முக்கிய நிலைகளை அறிதல்.
4. நாகரீகத்தின் வளர்ச்சியில் உலோகங்களின் முக்கிய இடத்தினை விவரித்தல்.

©KTBS Not to be republished

சாதாரணமாக வரலாற்றை மூன்று முக்கிய காலங்களாக பிரித்துக் கொள்ளலாம். அவைகளாவன: 1. தொல் பழங்கால வரலாற்றுக்கு முந்தைய காலம் (Pre historic Period) 2. ஆதிகால வரலாற்றுக் காலம் (Proto historic Period) 3. இதிகாச காலம் (Historic Period). மனிதனின் இதிகாசத்தில் தொல் பழங்கால வரலாற்றுக்கு முந்தைய காலம் 99.9 சதவீதம் கால அளவை உள்ளடக்கியது. ஆனால் அக்காலத்தைக் குறித்து ஆழமாகப் பயில உள்ள ஆதாரங்கள் மிகவும் குறைவு. அதனால் வரலாற்றில் தொல் பழங்கால வரலாற்றுக்கு முந்தைய காலத்திற்கு கொடுத்துள்ள இட அவகாசம் குறைவாகவே உள்ளன. மேலே கண்ட மூன்று காலங்களையும் வகைப்படுத்த, எளிதில் கிடைக்கக்கூடிய தன்மையின் பயன்பாடு எழுத்தறிவு ஆகும். எழுத்து அறிமுகமே இல்லாத காலக்கட்டத்தை தொல் பழங்கால வரலாற்றுக்கு முந்தைய காலம் என்று அழைக்கின்றனர். (உதாரணம் : கற்காலங்கள்) எந்தவொரு காலத்தில் எழுத்துக்களினைப் பற்றிய தெளிவு இருந்து அவைகளை இன்று படிக்க இயலா நிலை உள்ளது. எனினும் அக்காலக் கட்டத்தை 'ஆதி' பழங்கால இதிகாச காலம் என்று அழைக்கலாகிறது. (உதாரணத்திற்கு : ஹரப்பா நாகரீகக் காலம்). எந்த காலகட்டத்தில் எழுத்து அறிமுகம் இருக்கின்றதோ, மற்றும் அந்த எழுத்துக்களை இன்று படிக்க முடிகின்றதோ அக்காலத்தை இதிகாச காலம் என்று அழைக்கலாகின்றது.

**மனிதத் தோற்றம் மற்றும் வளர்ச்சி :** பூமி 4600 பத்து இலட்சம் வருடங்களுக்கு முன்பு பிறந்தது என்று அறிஞர்கள் கூறுகின்றனர். பூமியின் மீது காணக்கிடைத்த முதல் உயிரினம் என்றால் ஒரு செல் பாக்டீரியாக்களை ப்ரோக்யாரியோட் (Prokaryote) கள். இவை (ஆக்ஸிஜன்) பிராணவாயு இல்லாத சூழலில் வாழ உகந்தவை. தமக்கு தேவையான சக்தி மற்றும் ஊட்டச்சத்துக்களை சுற்றுச் சூழலிருந்து பெற்றுக் கொண்டன. பின் சுமார் 4000-திலிருந்து 2500 பத்து இலட்சம் வருடங்களுக்கு முன்பு இவை பாறைபாசிகள் அல்லது கடற்பாசிகள் காணக் கிடைக்கின்றன. பிறகு இவை தாவரங்கள் மற்றும் உயிரினங்கள் பரிணாம வளர்ச்சிக்கு காரணங்களாயின.

உயிரினங்கள் உலகிற்கு வந்தபோது 3500 பத்துஇலட்சம் வருடங்களுக்கு முன்பு நுண்ணுயிர்கள் உயிரினங்கள் தடம் (சுவடு) ஆஸ்திரேலியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நமது கர்நாடகத்தின் கண்டூர் தாலுக்காவில் தாரவாட ஜலஜ சிலைகளில் 2000 பத்து இலட்ச வருடங்களுக்கும் முன்பு நுண்ணுயிரிகளின், உயிரினங்களின் சுவடுகள் கிடைத்துள்ளன. இவ்வாறு ஆரம்பமான உயிரினங்களின் பரவல் பாதையில் 570 பத்து இலட்ச வருடங்களுக்கு முன்பு மீன் மற்றும் இன்னும் பிற நீர்வாழ் உயிரினங்கள், 438-லிருந்து 408 பத்து இலட்ச வருடங்களின் நடுவே பூச்சி கள், 408-லிருந்து 360 பத்து இலட்ச வருடங்களுக்கு இடையே சாருண்ணிகள், சுமார் 320 பத்து இலட்ச வருடங்களுக்கு முன்பு ஊர்வன, 248 பத்து இலட்ச வருடங்கள் முன்பு டைனோசரஸ், 213 பத்து இலட்ச வருடங்களுக்கு முன்பு பறவைகள் மற்றும் பாலூட்டிகள் 65 பத்து இலட்ச வருடங்களுக்கு முன்பு பிரமாண்ட பாலூட்டிகள் மற்றும் 25 பத்து இலட்ச வருடங்களுக்கு முன்பு (வானரங்கள்) வாலில்லாத-மனிதக் குரங்கினம் தோன்றியது.

5 பத்து இலட்ச வருடங்களுக்கு முன்பு இருகால் உயிரினங்கள், 1.8 பத்து இலட்ச வருடங்களுக்கு முன்பு மனிதன் தோன்றினான்.

இவ்வாறு ஆரம்பமான உயிரினத் தோற்றங்களின் பாதையில் முதலில் ஓர் அறிவு உயிரினங்கள் பிறகு நத்தை-சிப்பி, மீன், தாவரம், பூச்சி, சாருண்ணிகள், இறக்கையுள்ள பூச்சிகள், பறவைகள், பாலூட்டிகள், பூவிடும் தாவரங்கள், புல், வானரம், இருகால் உடையன தோன்றி விரிவடைந்தன. சுமார் 1.8 பத்து இலட்ச வருடங்களுக்கு முன்பு மனிதனின் தோற்றம் உருவானது. ஆதி மனிதனின் தேக உருவம் கொண்ட மனிதர்கள், முதலில் தென் ஆப்பிரிக்காவில் காணக்கிடைத்தனர். இவர்கள் ஆப்பிரிக்கா விலிருந்து உலகின் பல்வேறு பூமண்டல பகுதிகளுக்கு குடிபெயர்ந்து சென்று (நிலைத்தனர்) தங்கினர் என்று கூறப்படுகின்றது. இந்த வாதம் இன்று போதுமான விமர்சனத்திற்கும் உட்பட்டுள்ளது.

**உயிரினங்கள் மற்றும் தாவரங்களின் தோற்ற நிலைகள்**

| வருடங்கள் (பத்து இலட்சங்களில்) | உயிரினங்கள் | தாவரங்கள் |
|---|---|---|
| 4000 –2500 | நுண்ணுயிரிகள் | ஷைவல |
| 2500–570 | நத்தை - சிப்பி முதலானவை | ஆல்கெ |

©KTBS Not to be republished

| | | |
|---|---|---|
| 570–505 | மீன்கள் | |
| 438–408 | பூச்சிகள் | நிலத்தாவரங்கள் |
| 408–360 | நில, நீர்வாழ் உயிரினம் | ஃபேர்ன்,பாசி(பரணி எனும் செடி வகை) |
| 320–248 | ஊர்வன | |
| 248–213 | டைனோசர்கள் | |
| 213–144 | பறவைகள், பாலூட்டிகள் | |
| 144–65 | | பூவிடும் தாவரங்கள் |
| 65–38 | பிரமாண்ட பாலூட்டிகள் | புற்கள் |
| 25–5 | வானரங்கள், வாலில்லா மனிதக் குரங்கு | |
| 5 | இருகால் உயிரினங்கள் | |
| 1.8 | மனிதன் | |

தொல் பழங்கால வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் மூன்று படிநிலைகள் உள்ளன. 1. பழைய கற்காலம், 2. மத்திய கற்காலம், 3. புதிய கற்காலம்.

**பழைய கற்காலம் :**




இக்காலம் மனித வரலாற்றில் ஆரம்ப நிலை. புதைபொருள் - மனித பழமை செய்திகள் (Archaeological) பற்றிய அறிவியல் ஆய்வு நிலையாக உள்ளது. இக்காலத்தில் மனிதன் பழம், காய்கறிகள், கிழங்கு வகைகள் தின்று வாழ்ந்தான். நாடோடிகளாக இருந்த இவர்கள் உணவைத் தேடி குகைகளில், கல் மண்டபங்களில் வாழ்ந்தனர். கல் துண்டுகள் (கூர்மையான) கத்தி, கல் உளிமுனை முதலான பெரிய பெரிய கல் ஆயுதங்களை உபகரணங்களை பாறைத்துண்டுகளில் தயாரித்துக் கொண்டனர். இலை மற்றும் மரப்பட்டைகளை ஆடைகளாக மறைப்புக்காக பயன்படுத்தினர். அனைத்து காலங்களிலும் பழ வகைகள், கிழங்கு வகைகள் கிடைக்கவில்லை. பழைய கற்காலத்தின் இறுதிகட்ட நிலையில் உணவுக்காக வேட்டையாடுதல் மற்றும் மீன் பிடித்தலைக் கற்றனர். முதல் முறையாக நெருப்பின் அறிமுகமானது. பழைய கற்காலத்தில் முக்கிய தங்கும் இடம் என்பது மத்திய பிரதேசத்தின் கர்னூல், அமராவதி, தமிழ்நாடு அத்திராம்பக்கம் முதலானவைகள். சாதாரணமாக பழைய உலோகக் காலத்தை 5 இலட்ச வருடங்களில் இருந்து 122 ஆயிரம் வருடங்கள் வரை குறிப்பிடப் படுகின்றது.

©KTBS Not to be republished

**மத்திய கற்காலம் :** (Mesolithic age)**:**

இது பழைய கற்காலம் மற்றும் நவீன கற்காலம் இடையில் உட்பட்ட காலமாகும். அதனால் இதனை மத்திய கற்காலம் என்று அழைக்கப்படுகிறது. இக் காலத்து மனிதர்கள பெரிய பெரிய கற்களால் ஆன உபகரணங்களுக்குப் பதிலாக அமைப்பான சிறிய கல் ஆயுதங்களை பயன்படுத்த ஆரம்பித்தனர். அதனால் அக் காலத்தை சிறுகற்களால் அமைந்த கற்காலம் என்றும் அழைக்கலாகிறது. இந்த சின்னஞ்சிறு



தொல்பழங்கால மனிதனின் வாழ்க்கை நிலை குறித்த கற்பனைக் காட்சி


ஆயுதங்களை அம்பின் நுனியில் அல்லது கம்பின் முனையில் சுற்றி ஈட்டியைப் போன்று பயன்படுத்தி வேட்டையாடினர். காடு தானியங்களை உணவுக்காக சேகரித்தனர். உணவுக்கான தானியங்களும், வேட்டைக்கு செல்வதால் கிடைக்கும் வேட்டைப் பொருட்களும் கிடைப்பது நிரந்தரமானதாக இல்லை. பல சமயங்களில் பசியினால் காலம் கழிக்க வேண்டியிருந்தது. அதற்காக இவர்கள் கண்டுபிடித்த வழி என்னவெனில், வேட்டை சமயங்களில் காயம் அடைந்து இறக்காமல் போன விலங்குகள் அல்லது கிடைத்த குட்டிகளை தந்து தம்முடன் வளர்ப்பது என்பதாகும். ஒரு விதத்தில் இப்பிராணிகள் அவர்களுக்கு சில அவசர காலங்களில் உணவாக பயன்பட்டன. இது நிதானமாக பிராணி வளர்ப்பிற்கு வழி வகுத்தது. மத்திய உலோகக் காலம் மனிதர்கள் தமது மற்றும் வளர்ப்பு பிராணிகளின் உணவிற்காக அலைந்து திரிந்தார்கள். ஓய்வு நேரங்களில் தங்கியிருந்த இடங்களில் (கற்களின் மேலே) பாறைகளின் மேற்புறங்களில் ஓவியங்களை(சித்திரங்களை) வரைந்தார்கள். விலங்குகளின் தோல்களை தமது போர்வைகளாக (மேலாடைகளாக) பயன்படுத்தினர். நெருப்பின் அறிமுகம் நன்றாக இருந்தது.

இக்காலத்தின் முக்கிய தளங்களான மத்தியபிரதேசத்தின் பீம்பேட்கா, ஆதம்கர், கருநாடகத்தின் பிரம்மகிரி, கனகனஹள்ளி, இராஜஸ்தானின் பாகொர், கணேஷ்வர், மேற்கு வங்காளத்தின் பிர்பாண்புர், ஆந்திரப் பிரதேசத்தின் வான்பசாரி, உத்திரபிரதேச த்தின் சராய் நகர் ராய், மஹாதஹ முதலானவை முக்கியமானவைகள். மத்திய கற்காலத்தின்காலம் இன்றைக்கு சுமார் 12000 வருடங்களில் இருந்து 9000 வருடங்கள் வரை இருந்தது என்று சாதாரணமாக அறியப்படுகிறது.

©KTBS Not to be republished

**நவீன கற்காலம் :**

மத்திய உலோகக் காலத்தின் மனிதர்கள் பிராணிகளை வளர்த்ததினால் அவர்களுக்கு அவர்களின் பிராணிகளுக்கும் அவ்வப்போது உணவின் தேவை உண்டானது. அதனால் அம் மக்கள் உணவுக்காக அலைவதைவிட்டு நவீன தற்காலத்தில் உணவின் உற்பத்திக்காக முனைந்தனர். நதிக் கரையோரங்களில் சத்துமிகுந்த வண்டல் மண்ணில் விவசாயத்தை ஆரம்பத்தினர். விவசாயம் நவீன உலோகக் கால மக்கள் தானியங்கள் மற்றும் அவர்களின்



நவீன கற்கால ஆயுதங்கள்

வளர்ப்பு பிராணிகளுக்கு மேய்ச்சலை நிறைவு செய்தது. அதனால் நாடோடி வாழ்வினை துறந்து நிலையான தகுந்த பகுதிகளில் தங்க ஆரம்பித்தனர். இவ்வாறு விவசாயம் கலாச்சாரம் மற்றும் நாகரீகங்களின் தோற்றத்திற்கு முதல் அடியாக அமைந்தது. இந்திய துணைக் கண்டத்தில் விவசாயத்தின் ஆரம்ப நிலைகளை பாகிஸ்தானின் மெஹர்கர் தளங்களில் கண்டுபிடிக்கப்பட்டன.


இங்கு மக்கள் வாழ்வதற்காக உலர்ந்த செங்கற்களால் வீடுகளை கட்டினர். காஷ்மீரத்தின் புர்ஜ்ஹோம் பிரதேசத்தின் மக்கள் நிலத்திற்குள் குகைகளை நிறுவிக் கொண்டனர். விவசாயத்தில் உற்பத்தி செய்த தானியங்களை சேகரித்து வைக்கும் பிரச்சனை எதிர் வந்தபோது கையினால் மண்ணில் பானை செய்யும் வழியைக் கண்டுபிடித்தனர். அன்றி புடைக்கும், குத்தும், வீசும் உபகரணங்களை உபயோகத்திற்கு பயன்படுத்தினர். இக் காலத்திலேயே ஆரம்ப கால கிராமங்கள் பெருக ஆரம்பித்தன.

சக்கரத்தின் அறிமுகத்திற்குப் பிறகு சிறந்த மற்றும் வேலைப்பாட்டுடன் கூடிய பானைகளை தயாரிப்பதற்கு ஏதுவானது. இக் காலத்தில் கல்லின் ஆயுதங்களை நன்றாக தேய்த்து மெருகூட்டி பயன்படுத்தினர். பல்லாரி சமீபத்தின் சங்கனகல் இந்த வகையான ஆயுதங்களின் உற்பத்தி நிலையானது. சிறப்பாக கைக்கோடாலி, எலும்புகளினால் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தினர். கருநாடகத்தின் பனஹள்ளி, பிரம்மகிரி, பூதிஹாள, ஹள்ளூரு, பக்லிஹாளா, டி. சரசிபுரா, உத்னூரு, பீஹாரின் சிராண்டு முதலான பகுதிகளில் நவீன உலோகக் காலத்தின் இருப்பிடங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. சாதாரணமாக இக்காலத்தை இன்றைக்கு 9000 இருந்து

©KTBS Not to be republished

*5000 வருடங்கள் வரை என அறியலாம்.*

**இந்தியாவில் உலோகக்கால இருப்பிடங்கள்**




©KTBS Not to be republished

**உலோகக் காலம் :** நவீன உலோகக் காலத்தின் முடிவு காலத்தில் உலோகங்களின் பயன்பாடு ஆரம்பமானது. முதலில் மனிதர்கள் பயன்படுத்திய உலோகம் (செம்பு) தாமிரம். தாமிரத்திற்கு தகரத்தை சேர்த்து வெண்கலம் தயாரிப்பதை கற்றனர். செம்பு தாமிரத்தைவிட வெண்கலம் கடினமான ஒரு கலவை உலோகம்.

**தாமிரம் மற்றும் வெண்கலம் உலோகக் காலம் :** தாமிரம் மற்றும் வெண்கல ஆயுதங்களின் அளவு வெகுஇலகுவாக இருந்தமையால் அவைகளுடனேயே கல் ஆயுதங்களும் முடிவு பெற்றன. அதனால் இக் காலத்தை தாமிரம் மற்றும் வெண்கல உலோகக்காலம் என்று அழைக்களாகிறது. இது 5000 வருடங்களுக்கு முன் காணலாகின்றன. விவசாயம் மற்றும் பிராணி வளர்ப்பு முதன்மையான தொழிலாக இருந்தன. சக்கரங்களினால் செய்த அலங்கார பானைகள் இக்காலத்தில்

(கண்டு வருகின்றன) காணலாகிறது. தாமிரத்தின் உபகரணங்கள் ஆபரணங்கள் கிடைத்துள்ளன. நிலத்தை ஆழமாக உழவும் மற்றும் காட்டைத் திருத்தி விவசாயப் பூமியாக மாற்ற செம்பு உபகரணங்கள் உபயோகமாயின. இதனால் உணவுப் பொருட்களின் உற்பத்தியில் பெருக்கம் ஏற்பட்டது. அதிகமான தானியங்களை தேவையான பகுதிகளுக்கு அனுப்பி வைப்பதன் மூலம் வியாபாரம் வர்த்தகம் வாணிகம் என ஆரம்பமானது. இதன் விளைவாக வடமேற்கு இந்தியாவில் சிந்து மற்றும் அதன் துணை நதிகளின் பள்ளத்தாக்கில்ஹரப்பா எனும் நாகரிகம் எனும் சிறந்த கலாச்சாரம் தோன்றக் காரணமானது. இதனை முதல் நாகரீகம் என வரலாற்று அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். தென் இந்தியாவில் தாமிரத்தை ஒப்பிடும் போது செம்பின் பயன்பாடு அதிகமாக இருக்கவில்லை. கருநாடகத்தின் ஹள்ளூரு, பனஹள்ளி, பிரம்மகிரி முதலான பகுதிகளில் தாமிரம் மற்றும் செம்பின் உலோக ஆதாரங்கள் கிடைத்துள்ளன.


**பிரம்மாண்ட கல் கலாச்சார கல் சமாதிகள்**

**இரும்பு உலோகக் காலம்:** இரும்பு சிறந்த உறுதியான உலோகம். இது தென் இந்தியாவில் தாமிரத்திற்கும் முன்பே பயன்பாட்டில் இருந்தது. இரும்பு 3500 வருடங்களுக்கு முன்பே தென் இந்தியாவின் உபயோகத்தில் இருந்தது. இக்காலத்தை மிகச் சிறந்த உலோகக் கலாச்சார காலம் என்றும் அழைக்கின்றனர். பெரிய கல் கலாச்சார சமாதிகளில் சவத்தின் அறையை சுற்றியும் கல் சதுக்கதத்தை (Stone circle) நிறுவினர். சவத்தின் அறைகளில் கறுப்பு மற்றும் சிவப்பு வண்ண பானைகள் (Black & Red Ware) சாதாரணமாக காணலாகின்றன. இச் சமாதிகளை கருநாடகத்தின் சாதாரண மக்கள் பாண்டவரின் கோயில்/வீடு, மௌரியர்களின் கல் என்றும் அழைக்கின்றார்கள். இரும்பு ஆயுதம் மற்றும் உபகரணங்கள் விவசாயம் மற்றும் கைவேலைப் பொருட்கள் உற்பத்தியில் நிறைவடைந்தது. வட இந்தியாவில் இரும்பின் பயன்பாடு தீவிரமடைந்தது போன்று விவசாயத்திலும் வகைவகையான தந்திரங்கள் பயன்படுத்தப்பட்டது. இதனால் அதிகமான உற்பத்தி உண்டானது. அதிகமான உற்பத்தியை நிரந்தரமாக்கும் வர்கம் சுமார் 2600 வருடங்களுக்கு முன்பு தோன்றின. அவைகளே மக்களரசு.அதன் பிறகு நந்த, மௌரிய பேரரசுகளின்தோற்றத்திற்கு காரணமாகின. இரும்பு உலோகக் காலத்தைச் சேர்ந்த கருநாடகத்தின் முக்கிய இருப்பிடங்கள் என்னவென்றால் பனஹள்ளி, ஹிரொபன கல்லு,பிரம்மகிரி, கொப்பா, ஹைக்கடஹள்ளி, டி. நரசிபுரா, ஹெம்பிகை, ஹள்ளூரு , ஜடிகேனஹள்ளி, சாவனவதுர்கா, ஹீத்ரிதுர்கா, பாண்டவர்திண்ண முதலானவைகளாகும்.

பிரம்மாண்டமான கற்காலத்தின் சமாதிகளில் பல மாதிரிகள் உள்ளன. அவைகளில் கல் சதுக்கம் (Store Circle), குத்துக்கல் (Menhir), கல்மேடை (Dolmen), கற்குவியல், (Cairn) கல்லறை, இறந்தவர்களின் சாம்பல் (Aiv) அடக்கம் செய்யும் பாண்டம் முதலானவைகள் முக்கியமானவைகள் ஆகும்.

©KTBS Not to be republished

**புதிய சொற்களின் அறிமுகம்:**

| | |
|---|---|
| ஊர்வன : | நிலத்தின் மேலே ஊர்ந்து செல்லும் உயிரினங்கள் : உதா. பாம்புகள், ஆயிரங்கால் மரவட்டைகள். |
| இருநில : ஜீவராசிகள் | நீர் மற்றும் நிலம் இரண்டின் மீதும் வசிக்கும் ஜீவன். உதா. ஆமை, தவளை |
| பாலூட்டிகள் : | தனது குட்டிகளுக்கு பால் கொடுக்கும் உயிரினங்கள். உதா. பசு, ஆடு |
| இருகால் : உயிரினங்கள் | இரண்டுகால்களில் நிலத்தின் மீது நடக்கும் மற்றும் ஓடும் ஜீவிகள் : உதா. கொரில்லா, மனிதன். |

I. **கோடிட்ட இடங்களை சரியான சொற்களினால் பூர்த்தி செய்க.**

1. எழுத்துக்களின் அறிமுகம் இல்லாத காலத்கட்டத்தை ................ காலம் என்கிறார்கள்.
2. சிறுகற்களால் ஆன கற்காலத்தை ........................ கற்காலம் என அழைக்கின்றனர்.
3. இந்தியாவின் துணைக் கண்டத்தின் விவசாயத்தின் ஆரம்ப நிலைகளின் ............... பகுதிகளில் காணக் கிடைக்கின்றன.

II. **கீழ்க்கண்ட வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளி:**

1. வரலாற்றின் 3 முக்கிய காலங்கள் யாவை ?
2. உலகம் எவ்வாறு தோன்றியது ?
3. பழைய கற்காலத்தில் மனிதனின் உபகரணங்களைக் கூறுக.
4. மத்திய கற்காலத்தை எதற்க (நுணுக்க) சிறுகற்கள் உலகம் என்று அழைக்கின்றார்கள் ?
5. எந்த யுகத்தில் மனிதன் விவசாயம் செய்ய ஆரம்பித்தான் ?
6. மனிதன் பயன்படுத்திய முதல் உலோகம் எது ?
7. பெரியகற்காலத்தின் சமாதிகளை சாதாரண மக்கள் எவ்வாறு அழைக்கின்றனர். ?
8. கருநாடகத்தில் இருக்கும் பெரிய கற்கால இருப்பிடங்களைக் கூறுக.

III. **குழுவில் விவாதித்து விடையளி:**

1. (நவீன) புதிய கற்காலத்தில் விவசாய (தோற்றத்திற்கு) உற்பத்திக்கு காரணமான அம்சங்கள் யாவை ?
2. இரும்பின் அறிமுகத்தினால் இரும்பு யுகத்தில் உண்டான மாற்றங்கள் யாவை ?

**செயல்பாடுகள் :**

- சக்கரங்களின் உதவியினால் பானை செய்வதைப் பார். பானை செய்யும் முறையை குறித்து குயவர்களிடமிருந்து தகவலைப் பெறுக.
- களிமண்ணில் இருந்து பாத்திரங்களை தயாரிக்கவும்.

★★★★★

©KTBS Not to be republished

| பாடம் 4 | பண்டைய நாகரீகங்கள் (Ancient Civilizations) |
|---|---|

**பாட அறிமுகம்**


இப்பாடத்தில் உலகின் முக்கிய நாகரீகங்களை எகிப்து, மெசபடோமியா, சீனா மற்றும் ஹரப்பா நாகரீகங்கள் குறித்து அறிந்து கொள்ளல். அதுமட்டுமன்றி கிரேக்கம் மற்றும் ரோமன் நாகரீகங்கள் குறித்தும் அறிந்து கொள்ளல். இவ்வனைத்து நாகரீகங்களின் பங்களிப்பினை விவரமாக அறிதல்.

**திறன்கள் :**

1. உலகின் முக்கிய நாகரீகங்கள் தோன்றக் காரணமான நதிக்கரைகளை அறிந்து கொள்ளல்.
2. எகிப்து, மெசபடோமியா, சீனா மற்றும் ஹரப்பா நாகரிகங்களின் அரசியல், வரலாறு மற்றும் பங்களிப்பினை அறிதல்.
3. கிரேக்க நாகரீகத்தின் நகர அரசுகள் மற்றும் அவைகளின் பங்களிப்பினை அறிமுகப் படுத்துதல்.
4. ரோமன் நாகரீகத்தின் புகழ்பெற்ற ஜூலியஸ் மற்றும் அகஸ்டஸ் சீசர் அவர்களின் சாதனைகளை அறிதல்.

©KTBS Not to be republished

எந்த ஒரு உயிரும் வாழவேண்டுமெனில் உணவு, நீர், காற்று, ஒளி அத்யாவசியமான தேவையாகும். இவைகளுடன் இருப்பிடம் - உடைகளும் மனிதனின் அடிப்படைத் தேவைகளாகும். சாதாரணமாக தினசரி பயன்பாட்டிற்கு தேவையான நீர் மற்றும் சுத்தமான காற்று, நதிக்கரைகளில் காணக்கிடைக்கின்றன. அதனால் ஆதி மனிதன் நதிக்கரை ஓரங்களில் தங்கினான். அதன் விளைவாக, பின்னர் நாகரீகங்களும், நதிக்கரைகளிலேயே தோன்றக் காரணமாயின. இவ்வாறு நதிக்கரைகள் பழைய தொன்மை நாகரீகத்தின் தொட்டில்களாகும். நைல் நதிக்கரையில் எகிப்து நாகரீகம், யூப்ரடீஸ் மற்றும் டைக்ரீஸ் நதிகளின் கரைகளில் மெசபதோமியா நாகரீகம், ஹூவாங்க்ஹோ மற்றும் சிகியாங்க் நதிகளின் கரைகளில் சீன நாகரீகம், சிந்து மற்றும் அதன் துணை நதிகளின் பள்ளத்தாக்குகளில் ஹரப்பா நாகரீகங்கள் தோன்றின.




**நிலவரைபடத்தில் பண்டைய உலகின் நாகரீகங்கள்**

### *4.1 எகிப்து நாகரீகம்*

எகிப்து தொன்மையான உலகில் தோன்றிய முதல் நாகரீகமாகும். இது நைல் நதிக்கரையில் தோன்றியது. நைல்நதி உலகின் மிகப்பெரிய நீளமான நதி ஆகும். இது ஆப்பிரிக்கா கண்டத்தின் வடக்குத் திசையில் பாய்ந்து மெடிடெரேனியன் சமுத்திரத்தை சென்றடைகின்றது. இவ்வாறு பாயும் வழியில் எகிப்தைக் கடந்து செல்கின்றது. நைல்நதி இல்லாமல் போயிருந்தால் எகிப்து முழுமையான பாலைவனமாகக் காட்சியளித்திருக்கும். அதனால், 'எகிப்தினை நைல் நதியின் வரப்பிரசாதம்' (Egypt the gift of the Nile) என்று அழைக்கின்றனர்.

**அரசியல் வரலாறு :** இன்றைக்கு சுமார் 5400 வருடங்களுக்கு முன்பு எகிப்தில் அரச வம்சங்களின் ஆட்சி ஆரம்பமானது. எகிப்தின் அரசர்களை ஃபெரோ என்று அழைத்தனர். மெனெஸ் (Menes) என்பவன் முதல் ஃபெரோ மெம்பிஸ் (Memphis) நகரம் இவனின் தலைநகரமாயிருந்தது. இவனுக்குப் பிறகு வந்த ஃபெரோக்களில்

©KTBS Not to be republished

குபு, அமேன்ஹோடெப், தட்மோஸ் முக்கியமானவர்கள். குபு கிஜ்ஹி என்னுமிடத்தில் உலகின் மிகப்பெரிய (கூம்பகம்) பிரமீட்டை கட்டினான்.

அமேன்ஹோடெப் (Amenhotep) தனது திக்விஜயத்தின் மூலம் தனது அரசை விரிவுப்படுத்தி பேரரசை உருவாக்கினான். பின்னர் வந்த ஹபெரோக்களில் தட்மோஸ் மஹான் மிகப்பெரிய வெற்றியாளன் திக்விஜயத்தால் பல்வேறு நிலப்பகுதிகளை வென்று தமது அரசின் நிலப்பரப்பை விரிவுப்படுத்தினான் அவனுக்குப் பிறகு அவனின் மகளான ஹ்யாஷெப்சுட் (Hatshepsut) ஆட்சிக்கு வந்தார். அதன் மூலம் உலகின் முதல் பெண் பேரரசி ஆவாள்.

முடிவாக சுமார் 2300 வருடங்களுக்கு முன்பு எகிப்தினை கிரீஸின் அரசன் அலெக்சாண்டர் வெற்றி கொண்டான். அங்கு தனது பிரதிநிதியை நியமித்ததன் மூலம் டாலெமி (Ptolemy) எனும் வம்சம் துவங்கக் காரணமானான். புகழ்பெற்ற அரசி கிளியோபட்ரா (Cieopatra) இவ்வம்சத்தின் கடைசி அரசியாவாள். இவளின் காலத்தில் எகிப்து ரோம் பேரரசுக்கு உட்பட்டிருந்தது.



**கிஜஹி பிரமிட்**

**எகிப்து நாகரீகத்தின் பங்களிப்புகள் :** கோதுமை மற்றும் பார்லி எகிப்து மக்களின் உணவுத் தானியங்களாகும். விவசாயத்திற்கு நைல்நதியின் நீரைக் கால்வாய்களின் மூலம் பயன்படுத்தினர்.

**எகிப்துப் பேரரசில் அடிமைகளின் நிலை:** அடிமைகளினால், பிரம்மாண்டமான (கூம்பகம்) பிரமீடுகளின் உருவாக்கம் உருவானது. சமூகத்தில் பெண்களுக்கு சிறந்த மதிப்பு இருந்தது. எகிப்து நாகரீக மக்களுக்கு மறுஜென்மத்தில் நம்பிக்கை இருந்தது. அதனால் சவங்களை பாதுகாத்து வைத்தனர். பாதுகாக்கப்பட்ட சவங்களை 'மம்மி' என்றழைத்தனர்.

நம்மிடம் கிராமத் தேவதைகள் இருப்பதைப் போன்று பழமையான எகிப்தில் ஒவ்வொரு நகரத்திற்கும், நகர தேவதைகள் இருந்தன. அதுமட்டுமன்றி சூரியன் மற்றும் நதிகளை கடவுள் என்று வழிபட்டனர். பழமையான எகிப்தியர் ஹைரோக்ளிபிக்ஸ் (Hieroglyphic) எனும் ஓவிய எழுத்துக்களைப் பயன்படுத்தினர். ஹைரோக்ளிப் என்றால் 'புனித எழுத்து' எனும் பொருள். நைல் நதியில் விளைந்த ப்யாபிரஸ் எனும் ஜோன்டு புல்லின் மீது மையினால் எழுதினார்கள். இவர்களுக்கு வடிவியல் - கணிதத்தில் அபாரமான அறிவாற்றல் இருந்தது அறியலாகிறது. இந்த அறிவுத்திறனாலேயே பிரம்மாண்டமான பிரமீடுகளின் வடிவம் சாத்தியமானது. எகிப்தின் சிற்பங்களில் ஸ்பிங்க்ஸ் (Sphinx) எனும் பிரம்மாண்ட சிலை. இது சிங்க உடல் மற்றும் மனிதனின் முகத்தையும் கொண்டுள்ளது.

©KTBS Not to be republished

**I கோடிட்ட இடங்களை தகுந்த சொற்களினால் பூர்த்தி செய்க.**

1 எகிப்து நாகரீகம் …………… நதிக்கரையில் தோன்றியது.

2. கிஜ்ஹெ என்னுமிடத்தில் உலகின் பெரிய பிரமீடைக் கட்டுவித்த ஃபெரோ ……………

3. உலகின் முதன் முதல் பேரரசி ……………

4. சிங்க உடல், மனித முகத்தைக் கொண்ட எகிப்தின் சிலையை …………… என்கிறார்கள்.

**II கீழ்க்கண்ட வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளி.**

1. உலகின் நீளமான நதி எது?

2. எகிப்து நைல் நதியின் வரப்பிரசாதம் என அழைப்பது எதனால்?

3. ஃபெரோ என்றால் யார்? முக்கிய ஃபெரோக்களைக் குறிப்பிடுக.

4. உலகின் பெரிய பிரமீடு எது? அதனைக் கட்டுவித்தவர் யார்?

5. 'மம்மி' என்றால் என்ன?

6. பழமை எகிப்தியரின் எழுத்து எது?

**செயல்பாடு.**

- எகிப்து நாகரீகத்தின் ஓவியங்களை சேகரித்து ஆல்பம் தயாரிக்கவும்.

**4.2 மெசபடோமியா நாகரீகம்**

இன்றைய ஈராக் நாட்டின் டைக்ரீஸ் மற்றும் யூப்ரெடிஸ் நதிகளின் இடையேயான பள்ளத்தாக்கில் மெசபடோமியா நாகரீகம் தோன்றியது. கிரீக் மொழியில் மெசபடோமியா என்றால் இரு நதிகளின் இடைப்பட்ட பகுதியாகும். இப்பகுதியினை சுமேரர்கள், பாபிலோனியர்கள், ஹிட்டைடர்கள், அஸ்ஸிரியர்கள் மற்றும் நவீன பாபிலோனியர்கள் முதலான மக்களின் மக்கள் ஆண்டனர்.

**அரசியல் வரலாறு :** சுமேரியர்களிடம் இருந்து முதன் முதலாக இங்கு நாகரீகம் ஒன்று தோன்றி வழக்கத்தில் இருந்தது. உர் (Ur) கிஷ் (Kish) லகாஷ் (Lagash) முதலான நகர அரசுகள் தோன்றின. சுமேரியர்கள் கூய்னிபாரம் (Cuneiform) எழுத்துக்களில் பச்சை களிமண்ணின் பலகைகளின் மீது எழுதினார்கள். மெசபடோமியர்களுக்கு இந்தியர்களின் தொடர்பிருந்தது. சுமேரியர்களுக்குப் பிறகு அக்காடியர்கள் ஆட்சிக்கு வந்தனர். அக்காடியர்களின் பேரரசு அநாகரீகர்களின் தாக்குதலுக்குட்பட்டு மறைந்தது. பிறகு அமோரைடர்கள் (Amorites) எனும் மற்றொரு இனம் பாபிலோன்

©KTBS Not to be republished

எனும் நகரத்திலிருந்து ஆண்டார்கள். இவர்கள் அக்காடியன் இராஜ்ஜியத்தை தமது ஆட்சிக்குள் கொண்டு வந்து பரந்த அரசை தோற்றுவித்தனர்.

**ஹம்முராபி (Hammurabi) :** இவன் தனது சட்டத்தின் குறியீட்டின் மூலம் உலகப் புகழ்பெற்றவனாக உள்ளான். 'கண்ணுக்கு கண்' - 'பல்லுக்குப் பல்' எனும் தத்துவத்தின் சாரத்தைக் கொண்டதாக இச்சட்டங்கள் உள்ளன. பாபிலோனியர்களுக்குப் பிறகு காஸைட் (Kassite) மற்றும் ஹிட்டைட் எனும் இனத்தவர் மெசோபொடேமியாவினை சிலகாலம் ஆண்டனர்.




ஹம்முரபி

**அசுர்பனிபால் :** ஹிட்டைடர்களுக்குப் பிறகு மொசோபொடேமியாவை அஸ்ஸீரியர்கள் ஆண்டனர். அஸ்ஸீரியர்களில் மிகவும் புகழ்பெற்ற சக்ரவர்த்தி என்றால் அசுர்பனிபால் (Assurbanipal) இவன் துணிவு மிகுந்த போர்வீரர் மற்றும் கவிஞனாகவும் இருந்தான். 'நிநெவ்ஹ' நகரத்தில் சிறந்த நூலகத்தை நிறுவினான்.

**நெபுகட்னெஜர் :** பிறகு வந்த சாக்டியன்னரில் நெபுகட்னெஜர் (Nebuchadnezzar) புகழ்பெற்றவனாவான். இவன் பண்டைய உலகின் ஏழு அற்புதங்களில் ஒன்றான 'தொங்கும் தோட்டத்தை' (hanging garden) பாபிலோன் நகரில் நிறுவினான்.

இறுதியாக, இன்றைக்கு 2500 வருடங்களுக்கு முன்பு பர்ஷியாவின் சக்ரவர்த்தி சைரஸ் (Cyrus) பாபிலோன் நகரத்தை வெல்வதன் மூலம் பண்டைய மெசொபெடேமியா நாகரீகம் முடிவடைந்தது.



ஜிக்குராத்

**4.2.2. மெசொபொடேமியா நாகரீகத்தின் பங்களிப்புகள் :** உலகிலேயே முதன்முதல் சட்டக் குறியீடுகளைக் கடைபிடித்தவர்கள் மெசொபொடே மியர்கள். ஹம்முராபி உலகில் முதன்முறையாக சட்டக் குறியீடுகளை அமுல்படுத்தினான். இவனின் சட்டங்களில் அடிமைகளுக்கான பாதுகாப்பும், உரிமைகளும் இருந்தன. மெசொபொடேமியர்கள் ஹரப்பா மற்றும் எகிப்து நாகரீகங்களுடன் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்தனர். எகிப்தைப் போன்றே ஒவ்வொரு நகரங்களுக்கும் ஒவ்வொரு அதிதேவதைகள் இருந்தன. இங்கு 'ஜிக்குராத்' (Zigguart) எனும் உயரமான கோயில்களைக் கட்டினர். கோனலிபி (க்யூனிபார்ம்) ஆப்பு வடிவ எழுத்துக்களை இம்மக்கள் பயன்படுத்தினர். 'கில்கமேஷ்' என்பது மெசொபொடேமியர்களின் ஒரு மகா காவியமாகும்.

©KTBS Not to be republished

**I கோடிட்ட இடங்களை உரிய சொற்களைக் கொண்டு நிரப்புக.**

1. அசுர்பனிபாலன் ............ நகரத்தில் நூலகம் அமைத்தான்.
2. சுமேரியர்கள் ........... வடிவங்களில் எழுதினர்.
3. உலகின் முதன்முறை சட்டக் குறியீடுகளை அமுல்படுத்திய அரசன் ................

**II கீழ்க்கண்ட வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளி:**

1. மெசொபொடேமியா எந்த நதிகளின் கரைகளில் தோன்றி வளர்ந்தன?
2. மெசொபொடேமியாவை ஆண்ட இனங்கள் யாவை?
3. மெசொபொடேமியாவின் நகர அரசுகள் யாவை?
4. ஹம்முராபி குறித்து குறிப்பு வரைக.
5. பாபிலோன் நகரத்தில் தொங்குதோட்டம் அமைத்தவர் யார்?
6. 'ஜிக்குராத்' என்றால் என்ன?
7. மெசொபொடேமியர்களின் சிறப்புகளைக் குறிப்பிடுக.

**செயல்பாடுகள்.**

- பண்டைய உலகின் ஏழு அற்புதங்கள் குறித்து தகவல்களை சேகரிக்கவும்.

**4.3 சீன நாகரீகம்**

இந்தியாவின் வடகிழக்கு திசை இருக்கும் நாடு சீனா. இங்குள்ள மக்கள் மங்கோலியன் எனும் மஞ்சள் வண்ண தேக நிறம் கொண்ட இனத்தைச் சேர்ந்தவர்கள். யாங்க்த்ஸெ (Yangtze) மற்றும் ஹவாங்ஹொ (மஞ்சள் நதி) (Hwango) இங்குள்ள முக்கிய நதிகளாகும். முதலில் மஞ்சள் நதிக் கரையில் சீன நாகரிகம் தோன்றியது. அதனால் அதனை சீன நாகரிகத்தின் தொட்டில் என்று அழைக்கின்றனர். துவக்கத்தில் கிராமங்களில் இருந்து அவர்களின் ஆட்சிமுறை ஆரம்பமானது. நிதானமாக நெல்,பட்டு உற்பத்தியை துவங்கி வெளிநாடுகளுக்கும் வாணிபத்தைப் பெருக்கிக் கொண்டனர்.

**அரசியல் வரலாறு :** சீனாவின் முதல் வம்சம் ஷாங்க். இவ்வம்சத்தினர் இன்றைக்கு 3600 யிலிருந்து 3000 வருடங்கள் வரை ஆண்டனர். இவர்கள் விவசாயத்திற்கு பெரிதும் முக்கியத்துவம் அளித்தனர். இக் காலத்து மக்கள் பீங்கான் மற்றும் வெண்கலப் பாத்திரங்களை உற்பத்தி (தயாரிக்கும்) கைத் தொழில் கலைகளில் சிறந்து விளங்கி சாதித்தனர். ஷாங்க் வம்சத்திற்குப் பிறகு 'சௌ' வம்சத்தின் புகழ்பெற்ற அரசன் ஹுவாங்க் (Wu wang) புகழ் பெற்ற சீன தத்துவ அறிஞர்களான கன்ஃபூஷியஸ், லாவோத்ஸெ அவர்கள் சௌ வம்சத்தின் ஆட்சி யை முடிவுக்கு கொண்டு வந்து சின் வம்சம் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தது. சின் வம்சத்தினர் மூலமாகவே அத் தேசத்திற்கு சீனா என்று பெயர் வந்தது.

©KTBS Not to be republished

***ஷி - ஹவாங்க் - தி* (Shiv-Huang-Ti)*:*** *சின் வம்சத்தின் புகழ்பெற்ற அரசன் ஷி-ஹவாங்க் - தி. இவன் சீனாவை ஒன்று சேர்த்து, ஒரே முறையான சட்டத்தை கொண்டு வந்தான். ஆதலால், இவனை சீனாவின் முதல் அரசன் என்று அழைக்கின்றனர். எதிரிகளின் படையெடுப்பினை தடுப்பதற்காக 1500 மைல்கள் நீளமுள்ள சீனாவின் பெருஞ் சுவரினைக் கட்டச் செய்தான். ஷி-ஹவாங்க்-தி மரணம் அடைந்த பிறகு சீனா ஹான்வம்சத்தின் ஆட்சிக்கு உட்பட்டது.*

வு-தி (Wu-Ti) *ஹான் வம்சத்தின் புகழ் பெற்ற அரசன் வு-தி யின் காலத்தில் விரிந்த பரந்த சீனப் பேரரசு உருவானது. வெளிநாட்டு வாணிபம் வர்த்தகம் பெருகுவதற்கு வாய்ப்பு உண்டானது. ரோமன் பேரரசில் சீனாவின்பட்டிற்கு பெருமளவுதேவை இருந்தது. இதன் விளைவாக சீனா மற்றும் ரோம் இடையேயான வர்த்தகத்தில் பாதை ''பட்டுப் பாதை' என்றே புகழ் பெற்றது. புத்த மதம் இதே காலத்தின் சீனாவிற்குள் நுழைந்தது. ஹான் வம்சத்தின் காலத்தில் கலை மற்றும் இலக்கியத்திற்கும் பெருமளவு ஆதரவு கிடைத்தது. அதனால் இவ்வம்சத்தின் காலம் சீனாவின் வரலாற்றில் பொற்காலம் என்றே பெயர் பெற்று புகழடைந்தது.*

*பிறகு ஆட்சிக்கு வந்த சுங்க் வம்சத்தினர் காலத்தில் மரத்தினால் செய்யப்பட்ட (அச்சுக்கூடம்) அச்சு இயந்திரம் மற்றும் பீங்கான் தயாரிப்பு ஆரம்பமானது. மங்கோலியர்கள் சுங்கரர்களின் தலைநகர் பீகிங். (இன்றைய சீனாவின் தலைநகர் பீஜிங்க்) னை வென்றதன் மூலம் சுங்கர ஆட்சி முறையை முடிவுக்குக் கொண்டு வந்தனர்.*

***சீனா நாகரித்தின் பங்களிப்புகள்:*** *பண்டைய உலகிற்கு சீனர் அளித்த பங்களிப்பு அபாரமானது. தேநீர்* (Tea) *மற்றும் பட்டுத் துணியினை அறிமுகப்படுத்தினர். இது மட்டுமின்றி மூங்கிலினால் செய்த காகிதம், வெடிமருந்து, ஓவியத் தூரிகை* (Painting Brush) *பீங்கான், திசைக்காட்டும் கருவி, முதலானவைகளை கண்டுபிடித்த புகழ் சீனர்களையே சேர்ந்தது. சீனர்கள் ஓவிய எழுத்தின் மூலம் எழுதினார்கள். இவைகளை மூங்கில் கழிகளின் மீது மேலிருந்து கீழ்ப்புறமாக எழுதினார்கள்.*



***சீனர்களின் சித்திர எழுத்துக்கள்***

©KTBS Not to be republished

சீனாவின் தத்துவஞானியின் இடத்தை லாவோத்ஸெ மற்றும் கன்பூசியஸ் பெற்று பெருமைப்படுத்தினர். லாவோத்ஸெ சீனர்களுக்கு எளிமையான வாழ்க்கை, தியாகம் மற்றும் இயற்கையுடன் சமரசத்துடன் வாழ்வதை போதித்தான். மற்றொரு தத்துவஞானியான கன்பூசியஸ் சமூகத்தில் காணாமல் போயிருந்த நீதி மற்றும் சமூக மதிப்பீடுகளை நிலை நாட்டினான்.

I **கோடிட்ட இடங்களை உரிய சொற்களால் பூர்த்தி செய்க:**

1. சீனா மற்றும் ரோம் இடையேயான வணிகப்பாதை ....... பாதையென்று புகழ்பெற்றிருந்தது.
2. சீனர்கள் .............. எழுத்தின் மூலம் எழுதினார்கள்.

II **கீழ்க்கண்ட வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளி:**

1. சீன நாகரிகம் எந்த நதிக்கரையில் தோன்றி பரவியது?
2. சீனாவைஆண்ட முக்கிய வம்சங்களைக் குறிப்பிடுக.
3. சீனாவின் பிரம்மாண்ட சுவரை கட்டியவர் யார்? எதற்காக?
4. வு-தி அரசரைக் குறித்து குறிப்பு வரைக.
5. பண்டைய உலகிற்கு சீனர்கள் அளித்த பங்களிப்பினை அட்டவணைப்படுத்துக.
6. சீன நாட்டின் முக்கிய தத்துவ அறிஞர்களைக் குறிப்பிடுக.

**செயல்பாடுகள் :**

- பண்டைய மற்றும் நவீன உலகின் ஏழு அற்புதங்களை (அதிசியங்களை) சேகரித்து ஆல்பம் தயாரிக்கவும்.

### 4.4. கிரேக்க நாகரீகம்

கிரீக் - மெடிடரேனியன் சமுத்திரத்தில் இருக்கும் (வரிசைகளில்) தொகுதிகளில் ஒரு தீவு. சின்னஞ்சிறு மலைகள் மற்றும் பள்ளத்தாக்குகள் கிரீக்கை தனியாகப் பிரித்துள்ளன. கிரேக்கர்கள் இந்தோ- ஐரோப்பியர் இனத்தை சேர்ந்தவர்கள். பண்டைய கிரேக்கரில் அயோலியன், அயோனியன், டோரியன் எனும் இனப்பிரிவுகள் இருந்தன.

**நகர அரசுகள் :** மூன்று ஆயிரம் வருடங்களுக்கு முன்பு கிரேக்கர்களின் ஒவ்வொரு இனப்பிரிவிற்கும் ஒரு அரசன். அவனுக்கு பெரியவர்களின் அறிவுரைக் கூறும் சபை இருந்தது. கைத்தொழில் மற்றும் வர்த்தகம் வளர்ச்சி பெற்றதைப் போன்று இந்த இனப்பிரிவினர் தங்கியிருந்த கிராமங்கள் நிதானமாக பட்டணம், நகரங்களாகி வளர்ச்சி அடைந்தன. பின்னர் இவைகளே நகர இராஜ்ஜியங்கள் என ஆயின.

©KTBS Not to be republished

ஒவ்வொரு நகர இராஜ்ஜியத்திற்கும் தனதே ஆன படை, ஆட்சிமுறை, நகர தெய்வம் முதலானவைகளைப் பெற்றிருந்தன. இவ்வாறு கிரீஸின் நகர இராஜ்ஜியங்கள் தனித்துவத்தைக் காப்பாற்றிக் கொண்டாலும், கலாச்சாரத்தில் ஒன்றாக விளங்கின. கிரீஸ் நகர இராஜ்ஜியங்களில் ஏதென்ஸ் மற்றும் ஸ்பார்ட்டா மிக முக்கியமான வைகளாகும்.

***அரசியல் வரலாறு :***

***ஏதென்ஸ் :*** ஏதென்ஸ் கிரீஸினில் மக்களாட்சி முறையைப் பின்பற்றிய இலட்சிய நகர அரசு ஆகும். ஏதென்ஸில் இருந்த மன்னர் ஆட்சி முறையை ஒழித்து க்ளைஸ்தனீஸ் (Cleisthenes) என்பவன் *2500* வருடங்களுக்கு முன்பு மக்களாட்சி முறையை ஏற்படுத்தி நிலைநிறுத்தினான். பிறகு ஏதென்ஸில் பெரிக்லிஸின் காலம் ஆரம்பமானது. இவன் காலத்தை கிரீஸின் பொற்காலம் என்றே அழைக்கப்பட்டது. ஏனென்றால் பெரிக்லிஸின் காலத்தில் கலை, இலக்கியம், அறிவியல், தத்துவ அறிவியல் முதலான களங்களில் அசாதாரணமான முன்னேற்றம் கண்டன. அதனால் ஏதென்ஸை 'ஹெல்லாஸின் பள்ளி' (School of Hellas) என்று பெரிக்லிஸ் அழைத்துள்ளான்.

***ஸ்பார்ட்டா :*** டோரியன் இனப்பிரிவின் நகர இராஜ்ஜியமான ஸ்பார்ட்டம் கிரீஸின் இராணுவ அரசாகும். பர்ஷியாவின் சாம்ராட்டான டேரியஸ்ஸை கிரீஸ்ஸின் மீது தாக்குதல் நடத்தியபோது ஏதென்ஸ் மற்றும் ஸ்பார்ட்டா நகர அரசுகள் ஒன்று சேர்ந்து பர்ஷியாவை ம்யாராதான் போரில் எதிர்த்தன. பிறகு ஏதென்ஸ் மற்றும் ஸ்பார்ட்களின் இடையே முரண்பாடு (பிணக்கு) ஏற்பட்டது. இறுதியாக ஏதென்ஸ் தோற்று ஸ்பார்ட்டாவின் கீழேயுள்ள நாடானது.

***கிரேக்கரின் பங்களிப்புகள் :***

பண்டைய கிரேக்கர்கள் உலகிற்கு அளித்த பங்களிப்புகள் அபாரமானது. ஏதென்ஸ் நகரின் அதிதேவதை, ஒலிம்பியாவில் ஜ்யூஸ் (Zeus) எனும் கடவுளின் கோயில் உள்ளது. இங்கு நடக்கும் பண்டைய ஒலிம்பிக் விளையாட்டுக்களில் கிரேக்கத்தின் அனைத்து நகர அரசுகளும் பங்கு பெற்றன. இன்று நவீன ஒலிம்பிக் விளையாட்டுக்களில் உலகின் மிக முக்கிய நாடுகள் பங்கு பெறுகின்றன. தத்துவ அறிவியலிற்கு கிரேக்கர்களின் பங்களிப்பு அபாரமானது. கிரேக்கர்களின் சிறந்த தத்தவஞானி சாக்ரடீஸ். அவனின் சீடன் ப்ளாட்டோ. பிளாட்டோவின் சீடன் அரிஸ்டாட்டில். இவனின் சீடன் மாசிடோனியாவின் அரசனான அலெக்சாண்டர் மாபரும் வீரன். இவர்களது உலகின் சிறந்த குரு பரம்பரையாக உள்ளது. ப்ளாட்டோ

©KTBS Not to be republished

'அகாடமி' (Academy) கலைக்கழகம் எனும் கல்விக்கூடத்தை நிறுவினான். டெமொஸ்தெனிஸ் கிரேக்கர்களின் மிகச் சிறந்த மேடைப் பேச்சுத்திறமை திறமையுடையவனாக இருந்தான். ஹோமர் எனும் பார்வையற்ற கவி 'இலியாட்' மற்றும் 'ஒடிஸ்ஸி' எனும் மகா காவியங்களை இயற்றினான். வரலாற்றின் தந்தை (பிதாமகன்) ஹெரோடொடஸ் மற்றும் துஸிடீடிஸ் மிக முக்கிய வரலாற்றறிஞர்கள் ஈஸ்கிலஸ், ஸொபோக்லிஸ் மற்றும் யுரிபிடிஸ் மிக முக்கிய நாடகக்காரர்கள். இவர்கள் உலகின் இலக்கியத்துறைக்கு அபூர்வ பங்களிப்பை அளித்துள்ளார்கள்.

பெரிக்லிஸன் கட்டிய ஏதென்ஸின் பார்த்தெனான் ஆலயம் கிரேக்கர்களின் அழகான கட்டிடக்கலைக்கு உதாரணமாகும். கிரேக்கர்களின் சிற்பங்கள் உருவ அமைப்பை துல்லியமாக வடிவமைத்தனர். மைரான் அன்றைய மிகச் சிறந்த சிறப்பி என்றால் பாலிக்னாடஸ் அன்றைய மிகச்சிறந்த ஓவியனாக விளங்கினர். தேல்ஸ், பைத்தாகரஸ் கணித உலகின் புகழ்பெற்ற கணித மேதாவிகள். 'மருத்துவ அறிவியலின் தந்தை' ஹிப்பாக்ரிடஸ் கூட கிரேக்க நாட்டைச் சேர்ந்தவன்.

> கிரேக்கருக்கும் பர்ஷியன்னருக்கும் 2500 வருடங்களுக்கு முன்பு நடந்த மாரத்தான் (Marathan) நெடுந்தூர ஓட்டப்போட்டியில் கிரேக்கர்கள் வெற்றி பெற்றார்கள். போர்க்களமான 24 மைல்கள் தூரத்திலிருந்த ஏதென்ஸிற்கு இந்த சந்தோஷச் செய்தியினை கூறுவதற்காக 'பிலிப்பிடெஸ்' (Philippides) எனும் வீரன் ஓடினான். இறுதியாக வெற்றிச் செய்தியை ஏதென்ஸிற்கு கூறியவுடன், கீழே விழுந்து இறந்து விட்டான். அவனின் நினைவாக ஒலிம்பிக் விளையாட்டுக்களில் மாரத்தான் ஓட்டப்பந்தயத்தை சேர்த்தனர்.

கிரீஸின் ஜனநாயக முறையை கிரீஸின் மாசிடோனியாவின் அரசன் பிலிப் நாசப்படுத்தினான் (அழித்துவிட்டான்). அவனின் மகனே அலெக்ஸாண்டார். வெற்றியாளனும் ஆவான். அலெக்ஸாண்டர் மாபெரும் வீரன். சிறுவயதிலேயே உலகை வெல்ல விரும்பியவன். அதனால் உலகநாடுகளை வெல்ல திக்விஜயம் செய்தான். அதன் விளைவாக எகிப்து, பாபிலோன், பர்ஷியாக்களை வென்று இந்தியா வரை அவன் (தனது பெரும் படையுடன்) வந்தான். பிறகு தனது நாட்டிற்கு திரும்பி செல்லும் வழியில் இறந்துவிட்டான். இவன் எகிப்தில் அலெக்ஸாண்டிரியா எனும் நகரை நிர்மானித்தான்.

©KTBS Not to be republished

I **கீழ்க்கண்ட வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளி.**

1. பண்டைய கிரேக்கர்களில் இருந்த இனப்பிரிவுகள் யாவை?
2. பண்டைய கிரேக்கத்தின் நகர இராஜ்ஜியங்கள் யாவை?
3. ஏதென்ஸ் குறித்து குறிப்பு வரைக.
4. கிரீஸின் மிக முக்கிய வரலாற்றறிஞர்கள் யார்?
5. ஹோமர்களின் நூல்களை (இலக்கியம்) கூறுக.
6. 'மருத்துவ அறிவியலின் தந்தை' யார்?

II **கீழ்க்கண்ட 'எ' அட்டவணை மற்றும் 'பி' அட்டவணைப் பொருள்களை பொருத்தி எழுதுக.**

| எ | பி |
|---|---|
| ஏதென்ஸ் | பார்த்தெனான் கோயில் |
| ப்ளாட்டோ | மாசிடோனியாவின் அரசன் |
| பெரிக்லிஸ் | கிரேக்க நாடகக்காரன் |
| அலெக்ஸாண்டார் | கழகம் |
| ஈஸ்கிலஸ் | நகர இராஜ்ஜியம் (அரசு) |

**செயல்பாடுகள்.**

- நவீன ஒலிம்பிக் குறித்து தகவல்களை சேகரிக்கவும்.

### 4.5. ரோமன் நாகரீகம்

ஐரோப்பாவின் தெற்கே மெடிடரேனியன் சமுத்திரத்தில் நீளமாக படர்ந்து காணப்படும் தீவு இத்தாலி. இங்கு லாட்டினர் எனும் இனப்பிரிவு மக்கள் சமுதாயம் வசித்தது. 2700 வருடங்களுக்கு முன்பு டைபர் நதியின் கரையில் ரோம் எனும் மூதாதையர் பகுதி தோன்றியது. ரோமானியர்களின் ஆதி மனிதர்கள் ரோமுலஸ் மற்றும் ரீமஸ்.

**அரசியல் வரலாறு :** பின்னர் ரோமன் அரசியல் வரலாற்றில் ஜூலியஸ் சீஸர் மற்றும் அகஸ்டஸ் சீஸர் முக்கியமானவர்கள். க்ராஸஸ், பாம்ப்பெ மற்றும் ஜூலியஸ் அவர்களை உள்ளடக்கிய முதல் மும்மூர்த்திகளின் (First Triumvirate) ஆட்சி ரோமனில் ஆரம்பமானது. இந்த மூவரும் இராணுவ தளபதிகளாக ரோம் பேரரசின் பல்வேறு பகுதிகளையும் பார்த்துக் கொண்டனர்.

**ஜூலியஸ் சீஸர் :** க்ராஸஸ்ஸின் மரணத்திற்குப் பிறகு அதிகாரத்திற்காக பாம்ப்பெ மற்றும் ஜூலியஸ் இடையே போட்டி ஏற்பட்டது. இறுதியாக பாம்ப்பெயினை ஜூலியஸ் கொன்றான். பிறகு ஜூலியஸ் எகிப்தை வென்று எகிப்தின் ராணி கிளியயோபாட்ராவின் அன்பைப் பெற்றான். ஜூலியஸ் சீஸர் சர்வாதிகாரி ஆனதன் மூலம் ரோமின் குடியாட்சி அமைப்பு முறையை அழித்தான். இதனைக் கண்ட ஜூலியஸ் சீஸரின் எதிரிகள் வஞ்சகமாக சதிசெய்து கொன்றனர். ஜூலியஸின் காலத்தில் ரோமின் விவசாயம், கைத்தொழில் மற்றும் வணிகத் துறைகள் போதுமான முன்னேற்றத்தை சாதித்தது. ஜூலியஸ் காலண்டர்களை அறிமுகப்படுத்தினான். இந்த ஜூலியஸ்ஸின் அனைத்து செயல்களும் அகஸ்டஸ் சீஸர் தொடர்ந்து செய்தான்.

**அகஸ்டஸ் சிஸர் :** அகஸ்டஸ் சீஸரின் முதல் பெயர் ஆக்வேவியஸ். அவன் மார்க் அந்தோணி, லெபிடஸ் உடன் சேர்ந்து இரண்டாம் மும்மூர்த்திகளின் (Second Triumvirate) ஆட்சிமுறையை துவக்கினான். லெபிடஸ்ஸை ஓடிஸி அந்தோணி உடன் அரசைப் (இராஜ்ஜியத்தை) பகிர்ந்து கொண்டான். பிறகு அந்தோணியை அகஸ்டஸ் தோற்கடித்தான். பிறகு அகஸ்டஸ் அனைத்து அதிகாரங்களையும் தன்னிடமே வைத்துக்கொண்டு ஆட்சியை நடத்தினான். அகஸ்டஸ் சீஸரின் காலத்தை ரோமின் பொற்காலம் என்று அழைக்கப்பட்டது. ஏசு கிறிஸ்து கூட இவன் காலத்திலேயே வாழ்ந்தவர். அகஸ்டஸ் சமூகத்திற்கு தேவையான பல்வேறு நலத்திட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டான். இக்காலத்தை ரோமின் அமைதிக்காலம் என்று அழைக்கப்படுகிறது. ஆதலால், இக்காலத்தில் ரோம் பொருளாதார மற்றும் கலாச்சார முன்னேற்றங்களை சாதித்தான். அகஸ்டஸ்க்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசர்கள் சாமர்த்தியமற்றவர்கள். பின்வந்த இனப்பிரிவு மக்கள் தாக்குதலுக்கு ஆளாகி பண்டைய ரோமன் பேரரசு காணாமல் மறைந்தது.

**பங்களிப்புகள் :**

உலக இலக்கியத்திற்கு ரோமானியர்களின் பங்களிப்பு அபாரமானது. வர்ஜில் ரோமானியர்களின் சிறந்த கவி. 'ஈனியட்' அவனின் மகாகாவியம். ஓவிட் மற்றொரு சிறந்த கவி. இவர் மட்டுமின்றி சிசிரொ, ப்லௌடஸ் முதலானவர்கள் புகழ்பெற்ற இலக்கியவாதிகள். ஜூலியஸ் சீசரும் சிறந்த வரலாற்றாசிரியராக இருந்தான். தத்துவ இயல் துறையில் க்யாடோ முக்கியமானவன். சிசெரொ, செனெகா பிற தத்துவ அறிஞர்கள். இவர்கள் 'இயற்கையுடன் இணைந்து வாழ்' என்று கூறினார்கள். ரோமின் சிறந்த கட்டிடக் கலைக்கு கலோசியம் மற்றும் எம்பிதேடர் சிறந்த உதாரணமாக உள்ளன. க்யுபிடனின் உருவம், அராபெசிஸ் சிற்பங்கள் ரோமின் சிற்பக்கலைக்கு உதாரணங்களாக உள்ளன. ரோமானியர்களுக்கு அறிவியல் மற்றும் கணிதத் துறைகளில் ஆழமான அறிவிருந்தது. மூத்த ப்லினியு 'நேச்சுரல் ஹிஸ்டரி' (Natural History) எனும் (இயற்கை வரலாறு) உலக கலைக்களஞ்சியத்தையே இயற்றினான் (உருவாக்கினான்). க்யாலன் ரோமின் புகழ்பெற்ற அறுவைசிகிச்சை நிபுணன். ஸ்ட்ராபோ, டாலமி அக்காலத்தின் புகழ்பெற்ற சிறந்த புவியியல்

©KTBS Not to be republished

வல்லுநராக விளங்கினார்கள். ரோமானியர்களின் சட்டங்கள் பின்வரும் அனைத்து சட்டங்களுக்கும் அடிப்படையாக உள்ளது. இது சட்டத்துறைக்கு அவர்கள் அளித்த விலைமதிப்புமிக்க பங்களிப்பாகும். லத்தீன் ரோமன் பேரரசின் மொழியாக இருந்தது. இன்றைக்கும் சட்டம், அறிவியல் முதலான துறைகளில் லத்தீன் மொழி ஒலியையே பயன்படுத்தினர்.

**I கீழ்க்கண்ட வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளி :**

1. ரோமானியர்களின் மூதாதையர் யார்?
2. முதல் மும்மூர்த்திகளைக் (த்ரிமூர்த்திகள்) கூறுக.
3. ஜூலியஸ் சீசரின் காலத்தில் முன்னேற்றம் அடைந்த துறைகள் யாவை?
4. அகஸ்டஸ் சீஸர் குறித்து குறிப்பு வரைக.
5. ரோம் நாகரீகக் கால முக்கிய கவிஞர்களைக் கூறுக.
6. ரோமானிய தத்துவ வல்லுநர்களைக் குறிப்பிடுக.
7. ரோமானியர்களின் பங்களிப்பை அட்டவணைப்படுத்துக.

**II கீழ்க்கண்ட வினாக்களுக்கு குழுவில் விவாதித்து விடையளி :**

1. அகஸ்டஸ் சீஸரின் சாதனைகள்
2. ரோமானியர்களின் பங்களிப்புகளை அட்டவணைப்படுத்துக.

**III கீழ்க்கண்ட 'எ' அட்டவணை மற்றும் 'பி' அட்டவணைப் பொருள்களைப் பொருத்தி எழுதுக.**

| எ | பி |
|---|---|
| ரோம் | இயற்கை வரலாறு |
| அகஸ்டஸ் சீஸர் | டைபரி நதி |
| மூத்த ப்லினி | ரோமின் பொற்காலம் |
| க்யாலன் | ரோமின் கட்டிடக்கலை |
| கலோசியம் | ரோமின் அறுவை மருத்துவ நிபுணர் |

**செயல்பாடுகள் :**

- ரோம் நாகரீகத்தின் கலை மற்றும் கட்டிடக்கலை படங்களை சேகரித்து ஆல்பம் (படத்தொகுப்பு) தயாரிக்கவும்.


**4.6. ஹரப்பா நாகரீகம்**

ஒரு நூற்றாண்டு முன்பு வரை இந்தியாவின் வரலாற்றை வேதங்களின் காலங்களிலிருந்து ஆய்வு செய்யலாகிறது. சில வருடங்களுக்குப் பிறகு தயாராம் ஸ்னாகி மற்றும் ரகல்தாஸ் ப்யானர்ஜி அவர்கள் இன்றைய பாகிஸ்தானின் ஹரப்பா மற்றும் மொகஞ்சதாரோ என்னுமிடத்தில் பண்டைய நகரங்களின் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டனர். இவ்வாராய்ச்சி, இந்தியாவின் வரலாற்றை வேதங்களுக்கும் சுமார் 2000

©KTBS Not to be republished

வருடங்களுக்கு முன்பு கொண்டு சென்றது. துவக்கத்தில் சிந்து மற்றும் அதன் துணை நதிகளின் கரைகளில் இவை அறியப்பட்டதினால் சிந்துநதிக்கரை நாகரீகம் என்று அழைக்கலாகிறது. ஆனால், அன்றிலிருந்து இன்றையவரைக்கும் நடந்துள்ள ஆராய்ச்சிகளில் சுமார் 1500க்கும் அதிகமான இடங்கள் காணலாகின்றன. இதன் விளைவாக சிந்து நதிக்கரைகளைக் கடந்தும் இந்நாகரீகத் தடையங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அறியப்பட்டுள்ளன.

13 இலட்சம் சதுர கி.மீ. பரப்பளவில் ஹரப்பா நாகரீகம் பரவியுள்ளது. இதன் பரப்பின் வடக்குப் பகுதியின் இறுதி இடம் காஷ்மீரின் மாண்ட, மேற்குப்பகுதியின் இறுதி இடம் பலுச்சிஸ்தானின் சுக்தஜெந்தார், கிழக்குப் பகுதியின் இறுதி நிலை உத்திரப்பிரதேசத்தின் ஆலங்கீர்புர் மற்றும் தெற்குப்பகுதியின் இறுதி இடம் மகாராஷ்டிராவின் தைமாபாத்களாக பரவி காணப்படுகின்றன. ஆதலால் இந்நாகரீகத்தினை சிந்துநதிக்கரை நாகரீகம் என்பதற்குப் பதிலாக முதல் இடமான ஹரப்பாவின் பெயரினால் ‘ஹரப்பா நாகரீகம்’ என்று அறிந்து கொள்ளலா கிறது.





©KTBS Not to be republished

ஹரப்பா நாகரீகத்தில் பல நகரங்கள் இருந்தமை அறியலாகிறது. அவைகளில் பாகிஸ்தானில் இருக்கும் ஹரப்பா மற்றும் மொஹஞ்சதாரோ இந்தியாவின்

காலிபங்கன் (இராஜஸ்தான்), தோலாமீரா, லோதால் (குஜராத்) மற்றும் ராகிகரி (ஹரியாணா) முக்கியமானவைகளாகும் (நிலவரைபடம் பார்க்கவும்).

**நகரத்திட்டம் :** ஹரப்பா நாகரீகத்தின் நகரங்கள் திட்டமிட்டு கட்டப்பட்டுள்ளன. அவைகளின் பாதுகாப்பிற்காக கோட்டைகள் கட்டப்பட்டுள்ளன. அகலமான தெருக்கள், பொதுக் கிணறுகள், உப்பரிகையுடன் அமைந்த வீடுகள், சிறந்த முறையில் அமைக்கப்பட்ட கழிவுநீர் கால்வாய்கள் இவைகள் ஹரப்பா நாகரீகத்தின் சிறப்பு அமைப்புக்கள். கழிவுநீர் பாதை கால்வாய்கள் அமைப்பு மட்டும் நமது பண்டையர்களின் ஆபூர்வ சாதனையாகும். அவர்கள் சுத்தத்திற்கு அளித்துள்ள முக்கியத்துவம் இன்றைக்கும் முன் உதாரணமாக உள்ளது. இங்குள்ள நகரத்திட்டம் அமைப்பினை உலகின் வேறு எங்கும் உள்ள பண்டைய நாகரீகத்திலும் காண இயலாது. மொகஞ்சதாரோ நகரத்தில் பொதுஜன குளியல் இடம் உள்ளன. ஹரப்பா நகரில் ஆறு தானியக்களஞ்சியங்களும் அருகில் தொழிலாளர்களின் இருப்பிடங்களும் உள்ளன. லோதால் அன்றைய புகழ்பெற்ற கப்பல் துறைமுகம் ஆகும்.



**பொது குளியல் இடம் மொகஞ்சதாரோ**

**பொருளாதார வாழ்க்கை :** பருத்தி மற்றும் கம்பளி துணிகளை நெய்வது ஹரப்பாவினரின் ஒரு தொழிலாகும். அவர்களின் மற்றுமொரு தொழில் சுட்ட செங்கற்கள் தயாரித்தல். இவர்கள் கால்நடை பராமரிப்பு செய்து வந்தனர். எருமை, எருது, ஆடு, செம்மறி ஆடு, பன்றி, பூனை, நாய், ஒட்டகம், கழுதைகளை வளர்த்தனர். மற்றும் பருத்தியைப் பயிரிட்டனர். உலகில் முதல் முறையாக பருத்தியை விளைவித்த